ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19 ] விபவஹூ தைமீ [ஸஞ்சிகை 4

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா

[ ஸ்ரீ பாகவதம். 1-9-23 ]

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ஸ்ரீமான் உப. வித்வான். ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

(ஸஞ்சிகை 3, பக்கம் 71 தொடர்ச்சி.)

'அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி லோகோ வா ஸ்யாதநிந்த்ரக:' என்கிற விச்வாமித்ர வசநம் இங்கே அநுஸரிக்கப்படுகிற தென்பது ஸ்பஷ்டம். இந்த ராமாயண ச்லோகத்திற்கு ஸ்ரீ கோவிந்த ராஜீயத்திலும் ஸ்ரீ மஹேச்வர தீர்த்தீயத்திலும் திலகத்திலும், 'விச்வாமித்ரரால் ஸ்ருஷ்டிக்க ஆரம்பிக்கப்பட்ட லோகத்திற்கு வேறொருவனை (அதாவது திரிசங்குவை) இந்த்ரனாகச் செய்வதாகவும், அல்லது, இந்த்ர னென்பதே துஷ்டமானபடியால் அந்த லோகம் இந்த்ர னில்லாமலேயே இருக்கட்டும்' என்றும் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகத்தில் அதே ப்ரகாரமாகத் தேசிகன் திருவுள்ளம் பற்றியிருப்பதாக நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். 'அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி' என்பதற்குப் பதிலாக 'அந்யேந்த்ரகம் புவநமந்யத் கர்தும் க்ஷமே' என்று இங்கே உரைக்கப்பட்டது. 'வேறு இந்த்ரனைத் தலைவனாக உடைய வேறு லோகத்தை ஸ்ருஷ்டிக்கச் சக்தியுள்ள' என்று இதற்கு அர்த்தம்.

'ஹுவநசதுஸு' என்பதை முன் வார்த்தையோடும் பின் வார்த்தையோடும் தனித்தனியாய் அந்வயித்துக் கொள்வது. 'ஹுவநசதுஷுமிரு கூம் வா' என்று இரண்டாவது கல்பம். இதற்கு, 'வேறு லோகத்தை இந்த்ரனில்லாமலேயே ஸ்ருஷ்டிக்க வல்லமையுடைய' என்பது அர்த்தம். 'சுநூஇரு ம' என்கிற ராமாயண பதங்களுக்கு, ப்ரகரணத்தை அநுஸரித்து அந்யேந்த்ர விசிஷ்டமான லோகாந்தர பர்யந்தம் தாத்பர்ய மென்பது 'சுநெூரு கூம்' என்கிற பஹு வ்ரீஹியினுலும் லோகாந்தரத்தைச் சொல்லும் 'ஹுவந உநூஸு' என்கிற பதங்களினுலும் இங்கே தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. 'சுநிரு கொ வா ஜொகஃ' என்பது அநிந்த்ரகமான அந்ய புவநத்தைச் சொல்லும். இதன் அர்த்தம் இவ்வளவு ஸ்பஷ்டமாக இருந்தும், ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி வேறுக அபிப்ராயப்பட்டு ராமாயண வ்யாக்யாநத்தில், விச்வாமித்ர வசநத்திற்குத் தேசிகன் திருவுள்ளம் பற்றினதாகத் தாம் நினைத்த அர்த்தம் தமக்கு அநபிமத மென்றும், ஆனுல் அது தனி ச்லோகிக்கு ஒத்ததென்றும் கூறியிருக்கிறுர். தேசிகன் தாத்பர்யத்தைப்பற்றி அந்த ஸ்வாமி திருவுள்ளம் பற்றினபடி இருப்பதாக நினைக்க இடமிருப்பதாகத் தோன்றவில்லை.

ஸாமாந்யமாக மநுஷ்யராய்ப் பிறப்பவர்க்கு ஸாவித்ரீ ஸம்பந்தத்தினுல் எப்படி விலக்ஷணமான த்விஜ ஜந்மம் உண்டாகிறதோ, அப்படியே ஸாமாந்யமாக லோகத்தில் பிறந்து பரவியிருக்கும் நாடகத்துக்குச் சாந்தி ரஸ ஸம்பந்தத்தினுல் (அதாவது ப்ரஹ்ம ஸம்பந்தத்தினுல்) ஒரு விலக்ஷணமான அத்யாத்ம நாடகமென்கிற புதுப்பிறப்பு உண்டாகிறதென்று பாவம். லோகத்தில் த்விஜ ஸாமாந்யத்திற்கு வித்யா ஜந்மமான ச்ரேஷ்ட ஜந்மாவைக் கொடுப்பது ஸாவித்ரீ. இவர் குலத்துக்குக் கூடஸ்தரான விச்வாமித்ரர் த்ரஷ்டாவான ரிஷியாதலாலும், அவர் ஜ்ஞாந வம்சத்தில் உதித்தவரானபடியாலும், விலக்ஷணமான புதுப் பிறவியைக் கொடுக்கும் ஸாவித்ரியோடு தாம் ஏகவம்சமாயிருப்பதாலும், அந்த வம்ச ஸம்பந்தத்தாலேயே நாடகத்திற்கு ஒரு புது ஜ்ஞாந ஜந்மத்தைக் கொடுக்கத் தமக்கு ஸாமர்த்ய முள்ளதென்பது வ்யஞ்ஜிக்கப்படுகிறது. ஸாவித்ரியால் ஏற்படும் புது ஜந்மம் எப்படி ஜந்மாந்தர ப்ரத்வம்ஸியாகுமோ அப்படி இந்த நாடகமும் மறு பிறவியை அறுக்கும் என்றும் பாவம். 'ஜநநவஷுவீஜவோமூதிஃஹீஷா நடிவமிஷஷா' என்று முன்பே இந்த நாடகத்துக்குள்ள இந்த ப்ரபாவம் கூறப்பட்டது. 'விதீய ஜநு' என்பதால் லோகத்தில் ப்ரஸித்தமான நாடக ஸ்வரூபத்துக்கு இந்த நாடகத்தால் மறுபிறப்பு என்கிறது வ்யங்க்ய பாவம். 'ஜஷிஹிஃ' என்கிற பஹுவசநத்தால் இவர் குல கூடஸ்தரான விச்வாமித்ரருக்கு வஸிஷ்டரென்கிற ஒரு ரிஷி ப்ரஹ்மர்ஷி என்கிற பட்டத்தைத் தம் வாயாலே ஒப்புக்கொள்ளச் சிரகாலம் விளம்பித்தாலும், ப்ரஹ்ம மென்னும் வேதத்தின்

ப்ரதாந மந்த்ரமான காயத்ரீக்கு அவரே மந்த்ர த்ரஷ்டாவான ரிஷி. அவர் திருநாமத்தைச் சொல்லாமலும், அவரை ஸ்மரிக்காமலும் ப்ராஹ்மண ஜந்மத்தைக் கொடுக்கும் காயத்ரீ மந்த்ரத்தை அநுஸந்திக்கக் கூடாதென்றும், அவர் ஸ்மரண பூர்வகமாகத்தான் ப்ராஹ்மணர்களுக்கே ப்ராஹ்மண ஜந்மம் வரக்கூடுமென்றும் ரிஷிகளெல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்று ஸூசிக்கப்படுகிறது. விச்வாமித்ரர் பார்த்து வெளிப்படுத்திய ஸாவித்ரீ மந்த்ரத்தால் ப்ரஹ்ம குலத்தில் பிறந்தவர்களுக்கே விப்ரத்வம் ஸித்திக்கவேண்டியிருக்க, அவருடைய விப்ரத்வத்தை ஒப்புக்கொள்ள அவ்வளவு தடை ஏற்பட்டிருக்க வேண்டாமென்று பாவம். ஸாவித்ரியே அவர் குடியைத் தேடிப் பிறந்தாளல்லவா? 'க்ஷயிதம்' என்பதால் வஸிஷ்டர் தமது வாயால் சொல்லமாட்டாமல் வெகு காலம் ஆக்ஷேபித்தாலும், ரிஷிகளெல்லோரும் வாய்விட்டு இவர் ஸம்பந்தத்தினால்தான் ப்ராஹ்மண்யம் வருகிறதென்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்களென்று காட்டப்படுகிறது. 'ஸா தேவீ' என்பதனால் ஸாவித்ரீ கடகமான முதல் 'தத்' பதமும் நடுவிலுள்ள 'தேவ' பதமும் ஜ்ஞாபகப்படுத்தப் படுகின்றன. 'விச்வஜநநீ' என்பதால் லோகத்திற்கெல்லாம் ஜ்ஞாநப் பிறப்பைக் கொடுத்து, லோகத்திற்கெல்லாம் தாயாரானவள் விச்வாமித்ரர் குடியைத் தேடி அவருக்குப் பெண்ணாகப் பிறந்தாள் என்பது ஸூசிக்கப்படுகிறது. விச்வாமித்ரர் குலத்தில் விச்வஜநநி பிறந்தது ந்யாயந்தானே. 'விச்வஸ்ய மித்ரம் விச்வாமித்ர:' என்று பவபூதி மஹாவீர சரித்ரத்தில் கூறினார். விச்வாமித்ரரென்னும் ரிஷியின் பெயரைச் சொல்லும் சப்தம், 'மித்ரே சர்ஷௌ' என்கிற பாணிநீ ஸூத்ரத்தால் ஆகாரமாகிய தீர்க்கத்தோடு நிஷ்பந்நமாகிறது. 'க்ஷத்ரியம் ப்ராஹ்மணம் குர்வன் க்ஷத்ரியோ ப்ராஹ்மணோ ந்ருஷிர்' ('க்ஷத்ரியத்வம் க்ஷமிஷ்யாமி') என்று தம்முடைய தபஸ் ஸாமர்த்யத்தால் முன் வழியை மாற்றி, நூதநமாக ஸ்ருஷ்டிக்கக் கூடிய விச்வாமித்ரருக்குப் பயந்து பாணிநி முநியும், இவருடைய திருநாமத்திற்கு 'விச்வத்துக்கு அமித்ரம்' என்று அர்த்தமாகாமல் 'விச்வத்துக்கு மித்ரம்' என்று அர்த்தம் செய்து அவரை ஸந்தோஷப்படுத்த, அவர் திருநாம நிர்வாஹார்த்தமாகவே தனியாக இந்த ஸூத்ரம் செய்தார்போலும்! இந்த்ரன் வ்யாகரணத்துக்கு ப்ரவர்த்தகர் என்பது ப்ரஸித்தம். ப்ருஹஸ்பதியினிடம் இந்த்ரன் சப்த பாராயணம் அத்யயநம் செய்தார். வேறு இந்த்ரனை ஏற்படுத்துவதாகச் சபதம் கூறியவர் வேறு வ்யாகரணத்தை ஏற்படுத்த அசக்தரா? விச்வத்தினிடத்தில் மிகுந்த மித்ர பாவத்தையுடைய விச்வாமித்ரர் குலத்தில், விச்வத்தினிடத்தில் வாத்ஸல்யத்தையுடைய தாயாரான விச்வ ஜநநி பிறப்பது உசிதமென்றும் பாவம். 'யதநந்யமோத்ரா' என்பதால் இவருக்கும் ஸாவித்ரிக்கும் ஸமாந வம்சயத்வத்தைக் காட்டி, எப்படி காயத்ரீ

68



ஸம்பந்தம் எல்லோருக்கும் அவச்யோபாதேயமோ, அப்படியே வேதாந்தாசார்யரான இவருடைய ஜ்ஞாந வம்ச ஸம்பந்தம் எல்லோருக்கும் இருப்பது அழகாகும் என்பது நமது கொள்கை. இவருடைய ஜ்ஞாந வம்சமாகிய விச்வாமித்ர வம்சத்தோடு ஸம்பந்தம் த்விஜ ஸமுதாயத்துக்கும் உள்ளது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம் என்பதும் இங்கே ஸூசிதமாகக் கொள்ளலாம்.

ஸ்ரீஸ்வாமி, உத்பாதகமான வம்சத்தை முதலில் கூறி, பிறகு ப்ரஹ்மத்வத்தைக் கொடுக்கும் ஸாவித்ரியின் குலமே தமது குலம் என்பதையும் கூறினார். உத்தம காவ்யம் த்வநி ப்ரதாநமாக இருக்கும். கண்டா நாதத்தின் அநுகரணம் போல் த்வநி பரம்பரைகள் நாடகத்தில் மேலும் மேலும் வ்யங்க்யமானல் இவர் செய்யும் நாடகம் உத்தமமாகும். இவரே ஸ்ரீநிவாஸனுடைய கண்டையின் அம்சமாக இருந்துவிட்டால் த்வநி மயமான காவ்யத்தைச் செய்யத் தட்டில்லை. த்வநியில் தம்முடைய ஸஹஜ ஸாமர்த்யத்தை வெளிப்படுத்துவதற்காக இவர் திருவேங்கடமுடையானுடைய கண்டையின் அம்சமாக அவதரித்தவரென்பது கூறப்படுகிறது. இந்த நாடகம் ஆஸுர ஸ்வபாவங்களைப் போக்கும். பத்மாஸநர் ஆதிகவியான ப்ராசேதஸருக்கு மதுமயமான ஸரஸ்வதியை அநுக்ரஹித்தவர். அவர் பாரதீ பர்த்தா. அவருடைய சந்தத்தால் தான் த்வநிமயமான ராமாயண ஸரஸ்வதி ப்ரவ்ருத்தித்தது. அவரால் பகவத் கைங்கர்யத்தில் ஏற்படுத்தப்பட்டது ஸ்ரீநிவாஸனுடைய கண்டை. அந்தக் கண்டை இவருடைய உருவமாக அவதரித்ததென்று பெரியோர் கூறுவர். 'வ்யாஹ்ருத' என்கிற சப்தம் ப்ரயோகம் என்றும் நாடக விதியில் கண்டாம்சத்வம் உபயுக்தம் என்பதையும் ஸூசிக்கலாம். 'வ்யோமஸ்ப்ருசோயம்' என்று முன்பே நாடக விஷயத்தில் 'வ்யோம' சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. 'வ்யோமவிஜ்ஞாநம்' என்று சாகுந்தளத்திலும் காண்க. 'உவவத்' என்கிற சப்தத்தினால் 'தகூயாஸாவஸ வீதெதி காஸெணெ ஸூவவாஜிஹ்:' என்கிற ப்ரமாணம் ஸ்மரணத்துக்கு வருகிறது. மற்ற உபபத்திகளுடன் இவ்விடத்தில் முக்யமாக ப்ரகரணாநுரோதேந இனிய சொற்களால் காந்தாஸம்மிதோபதேசத்தால் ஆஸுர ஸ்வபாவம் நம்மை அணுகாமல் செய்து விலக்குவதையும், கணீர்கணீரென்கிற நாதபரம்பரையில் மேலும் மேலும் பாவ பரம்பரைகள் த்வநிக்கச் செய்வதையும் கொள்வது உசிதம். ஸ்ரீநிவாஸனுடைய பரிசார விதியில் ஏற்படுத்தப்பட்ட கண்டையின் அம்சமாகிய இவர் 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்று ஸ்ரீநிவாஸனுடைய கடாக்ஷ ப்ரவாஹமாக அவதரித்த ஸ்ரீபாஷ்யத்தைக் கணகணவென்று மதுமயங்களான சொற்களால் எல்லோரும் களிக்க ச்ராவணம் பண்ணிவைப்பது ந்யாயம். அந்தக் கைங்கர்யம் ஸ்ரீநிவாஸனுக்குக் கண்டை செய்யும் பரிசார

விதியாகும். இது பற்றியே கண்டாம்சரான இவர் 'ஸ்ரீபாஷ்யத்தை ப்ரவர்த்திப்பிப்பதே ப்ரதாந கைங்கர்ய' மென்று அறுதியிட்டார். இந்த விஷயத்தை அடுத்த ச்லோகத்தில் ஸாதிக்கிறார். இருபது திருநக்ஷத்ரத்தில் ஸகல வித்யைகளையும் தாம் ஓதினதாகக் கூறுகிறார். ஸகல வித்யைகளிலும் பாரங்கதராயில்லாவிட்டால் ஒருவர் நாடகம் இயற்ற முடியாதென்பது 'ந ஸா வித்யா ந தச்சில்பம்' என்கிற ச்லோகத்தினால் ஏற்படுகிறது. அதற்கு அநுகுணமான ஸாமர்த்யம் தமக்கு உண்டென்று இங்கே காட்டப்படுகிறது. 'ஸகலவித்யாவாஹிநீ ஜலதெள' என்று ரூபிக்கப்படும் ஸ்ரீபாஷ்யகாரரின் க்ரந்தங்களை ச்ராவணம் பண்ணிவைப்பதற்கு ஸர்வ வித்யைகளையும் விசேஷேண ச்ரவணம் பண்ணியிருக்கவேண்டியது அதிகாராபாதகம். நாநா வித்யா ச்ரவணம் சாரீரக பாஷ்ய ச்ராவணத்திற்கு அத்யந்தோபயுக்தம். சாரீரக பாஷ்யத்தை முப்பது ஆவ்ருத்தி ச்ராவணம் பண்ணிவைத்ததாக ஸாதிப்பதால் வேதாந்தாசார்யத்வம் தமக்கு ஸித்திப்பது மன்றியில், 'ஜிஹ்வா ஸ்வயம்பூதா' என்னும் ஆசார்ய லக்ஷணப்படி சிரகாலாப்யாஸத்தால் 'தவ' ப்ரத்யய விசிஷ்டமான ஸர்வோத்தம மதுமத்வம் இவருடைய நாவிற்கு இருப்பதாக ஸூசிக்கப்படுகிறது. அத்யந்தம் சுவையுடைய தேன் மொழிகள் இவரிடம் அமைந்திருக்கின்றனவாதலால், இவர் செய்யும் நாடகம் மதுரிம குண பூயிஷ்டமாய் இருக்கும். வேங்கடநாத னென்னும் ஒரு நாதன் தம்முடைய நாதனுக்கு உபஹாரமாய் ஸமர்ப்பிக்கும் நாடக மிது நாதனுக்கு நாதன் உபசரிப்பது உசிதம். நாதனுடைய ச்ரவணத்திற்கும் இந்த அர்த்யமான நாடகம் பத்யமாகும். 'ஸத்வஸ்த ஹேதிகா ஹைதுகத்வதி ஸாம்த நாடகே ஸாவத்யதஸ்து தத்வஸ்து ஸம்ஸ்யதே ஸாய ஸாவகூ:' என்று பர ஸித்தாந்தங்கள் நாடகங்க ளென்றும், அவைகளில் ப்ராயேண உண்மையான கதை அந்யதாவாகவும் அதாத்விகமாகவும் வர்ணிக்கப்படுவது வழக்கமாதலால் நாடகங்களால் தத்வத்துக்கு உபப்லவம் வருமென்றும் தாமே நாடகத்தைத் தூஷித்திருக்க, இவர் தத்வோபதேசார்த்தம் நாடகம் செய்யலாமோ என்று ஆக்ஷேபம் வரலாம். லோக த்ருஷ்டமான ப்ராயிகோத்ஸர்க்கத்துக்கு இது போன்ற நாடகம் அபவாத மென்றும், இது தத்வ ரூபமான அர்த்தத்திலிருந்து அநபேதமானது (அதாவது நீங்காதது) என்றும், ஸ்வயம் என்னும் பதத்திலுள்ள 'யம்' ப்ரத்யயத்தால் காட்டுகிறார். 'வ்யயித' என்பதினால், இந்த ச்லோகம் பண்ணுகிற அவஸரத்திலேயே செய்தருளப்போகிற நாடகம் க்ருத்ஸ்நமும் புத்திஸ்தமுமென்று தெரிகிறது. 'ஹ்ருத்ய:' என்கிற விசேஷணம் போதுமோ நாடகத்திற்கு? 'ச்ரவ்ய:' என்கிற குணம் வேண்டாமோ என்றால், ரங்கநாதனுக்கு ப்ரீதியுள்ள தென்பதால் அதற்கு ப்ரேயோ குணமும் உள்ளதென்று 'நாயஸ்ரீதயே' என்

பதால் ஸூசிதம்: தாம் தர்க்கம் முதலிய நாநாவித்யைகளிலும் விசேஷ பாண்டித்யம் உடையவ ரென்றும் ந்யாய ஜடிலமான சாரீரக சாஸ்த்ரத்தைச் சச்வத்காலமும் ப்ரவசநம் பண்ணுகிறவரென்றும் சொன்னதினால், நாடகத்திற்கு வேண்டிய கோமளமான சொல்லமைப்பில் அப்யாஸம் இராதென்றும், எப்பொழுதும் ப்ரஹ்மேதர ஸர்வ விஷய வைத்ருஷ்ண்யத்தையே த்ருடமாக அப்யஸித்துக் கொண்டு ‘நியதும்தவஹ்ஷிஹிர-வயிஉஹாநம்ஓஜஜுயள’ என்று ப்ரஹ்மாநுபவத்திலேயே ஸர்வதா யோகிகளைப்போல் இவர் முழுகியிருப்பவராதலால் இவர்க்கு நாடகம் செய்வதற்கு அவகாசம் இராதென்றும், இவர் ஒரு வ்யாபாரத்திலும் வ்யாபரிக்க இடமில்லையென்றும், இவருக்கு அவகாசமிருந்து இவர் நாடகம் செய்ய ப்ரயத்நப்பட்டாலும் அதற்கு வேண்டிய மநோலாளித்யமும் பதலாளித்யமும் இவருக்கு இராவென்றும் ஆக்ஷேபம் வர, அதற்கு ஸமாதாநம் கூறுகிறார் ‘உத-வஹ்ாவஸ’ என்கிற ச்லோகத்தால். தம்முடைய ப்ரயத்நத்தினால் வாக்கையும் அர்த்தங்களையும் அவற்றின் அழகான ஸம்ச்லேஷத்தையும் இவர் தேடவேண்டியிருந்தா லல்லவோ இந்தக் கேள்விக்கு இடமுண்டு. மநு வ்யாஸர் வால்மீகி முதலிய மஹர்ஷிகள் ஒரு ஸபையாகச் சேர்ந்து ச்ரவணம் பண்ணிச் சிர: கம்பநம் பண்ணத்தகுந்த அம்ருதத்தால் நிறைந்த ரஸச்சொற்கள் இவருடைய ஹ்ருதயத்தையும் நாக்கையும் வலுவில் தேடி அடைந்து, கண்டாம்சமான இவர் திருவாக்கிலிருந்து கணகணவென்று வெளிப்படவேண்டுமென்று ஆசைப்படுகின்றன. ‘வஸிஷகு’ என்கிற சப்தத்தால் உத்தமமான வாக்கமைந்த இனிய கவிகளான மநு முதலியவர்கள் சேர்ந்து ச்ரோதாக்களாய்க் கூடிய ஸபை கூறப்படுகிறது. அவர்களெல்லாரும் மஹா தபஸ்விகளல்லரோ? அவர்கள் விஷயத்தில் திவ்ய வாக்வர்ஷாநுக்ரஹம் வருகிறதுபோல் தபஸ்வியல்லாத ஸாமாந்ய ஜநங்களுக்கு வரக்கூடுமோ என்றால், உயர்ந்த வாக்ப்ரவாஹம் போன்ற கங்கா ப்ரவாஹம் மஹாதபஸ்வியான ஈச்வரனுடைய ஜடிலமான சிரஸ்ஸில் விழுந்து சுழல்வதுபோல், ஒரு அடி எடுத்து வைக்க யோக்யதையில்லாத ஒரு மூடவன் தலையில் அது கேவலம் க்ருபையால் விழுந்தால் யார் தடுக்கக்கூடும்? ‘விதி வாய்க்கின்று காப்பார்?’ கங்கைக்கு அநேக ஆவர்த்தங்களோடு சுழன்று நர்த்தநம் பண்ணுவதில் குதூஹலமிருக்கும். இதை ஸ்வாமி ‘நடநவட-விஸ-யவஸரிகு’ என்று ஸாதித்திருக்கிறார். நர்த்தநம் செய்யும் கங்கைக்கு, நர்த்தநம் செய்பவன் சிரஸ்ஸில் நர்த்தநம் பண்ணுவதில் மிகவும் ருசி: ‘நடவதி உக-டதட நடநவட-’ வானவள் கங்கை. ஈச்வரனிடத்திலிருந்து ஜ்ஞாநத்தைத் தேடுவதுண்டு. ஈச்வரன் ஸர்வஜ்ஞன்; அவர் நடராஜன்; அவர் ஸரஸ்வதீ புத்ரன்; ராமாயணாநுக்ரஹம் பண்ணின ப்ரஹ்மாவின் புத்ரன். நானோவென்றால் நடநம் செய்வதற்குக்

கால்கூட இல்லாத பங்கு. என் தலையில் வாக்ரூபமான கங்கா ப்ரவாஹம் தானே வந்து விழுந்து என்னை நாடகம் செய்யும்படி செய்வித்தால் அந்த பாக்யத்தைத் தடுப்பவர் ஆர்? 'காப்பாரார்' என்கிற ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தி இதனால் ஸூசிதம். 'வ்யவஹ்ருத்யுபநிஹ்நுதி ஜநே' என்பதனால் 'கவிதா ஹ்வய ஊர்மதா வரா' என்கிற வசநம் ஸூசிதம். இது நட ப்ரகரணமானதாலும் கங்கா த்ருஷ்டாந்தத்தையும் நடந விஷயமாகவே யோஜித்து அழகாகக் காட்டுகிறார். தார்ஷ்டாந்திகத்திலும் தம்மை நடநம் செய்வதற்கு அடியோடு சக்தியில்லாத பங்குவாகக் காட்டிக்கொள்ளுகிறார். கங்கா ப்ரவாஹமாக வாக்கை நிருபணம் பண்ணுவதால், தட்டுத்தடை யில்லாமலும் மிகுந்த குளிர்ச்சியோடும் தெளிவோடும் சுத்தியோடும் இனிமையோடும் ப்ரஸரிக்கும் ஸ்வபாவம் வாக்குக்குக் காட்டப்படுகிறது. ஈச்வரன் விச்வாசார்யன் என்று தயா சதகத்தில் நிர்த்தேசம். விச்வாசார்யனுக்கு அமைகிற திவ்ய வாக்கான கங்கை தமக்கும் க்ருபையால் அமைகிறது. மநுவும் வ்யாஸரும் வால்மீகியும் ஜநதாசார்யர்கள். அவர்களுக்குத் தகுந்த வாக் ஸாமாந்ய ஜநமாகிய தமக்குத் தானே வலுவில் அமைகிறது என்றும் 'ஜந' சப்தத்தால் கொள்ளலாம்.

கங்கையை த்ருஷ்டாந்தமாக எடுத்ததில் தர்க்க கர்க்கசமான மனத்தை உடையவருக்கு மலையைப் பிளப்பதைப் போன்ற கடினமான சப்தமல்லவா அமையும் என்று முதலில் செய்த ஆக்ஷேபம் பலப்பட்டு விட்டது என்று மறுபடியும் ஆக்ஷேபம் வர அதற்குப் பரிஹாரம் சொல்லப்படுகிறது. கங்கை, மலையைத் தன்னுடைய வேகத்தாலும் ப்ரவாக பலத்தினாலும் பிளக்கத்தான் பிளக்கும்; மலைக்கும் பயத்தை உண்டு பண்ணும். அதைப்போல் இவருடைய வாக்கும் மலைபோல் எதிர்த்துவரும் ப்ரதிபக்ஷிகளின் பலத்தைப் பேதித்துப் பயத்தை உண்டுபண்ணும். மலையைப் பிளப்பதுகூட கங்கைக்குப் பெரிதல்ல. விந்த்ய பர்வதம்போல் விசாலமான ஈச்வரனுடைய ஜடா முடியில் விழுந்து சுழல்வதும், அவருடைய சிரஸ்ஸை ஆட்டுவிப்பதும் மிகவும் அரிதன்றோ? அதையும் கங்கை செய்கிறாள். இவருடைய திருவாக்கு ஸர்வஜ்ஞனான ஈச்வரனையும் சிரஃகம்பம் செய்யும்படி பண்ணுகிறது. இப்படி உயர்ந்த இடங்களில் கம்பீரமாயும் பயங்கரமாயும் ப்ரவஹிக்கும் கங்கை, தாழ்ந்த பூமியில் மதுரமும் தெளிந்ததும் மநோஹரமுமான ஜலங்களைப் பெருக்கவில்லையா? இடத்திற்குத் தகுந்தபடியும் விஷயத்திற்குத் தகுந்தபடியும் வாக்கு இருக்கும். இந்தப்படிக்கு இந்தக் கங்கா த்ருஷ்டாந்தத்தால் பூர்ணோபமை ஏற்படுகிறது. அதன் பேரில் 'இவருக்கு மதுரமான வாக்கிருந்தாலும் இவர் உத்தேசிக்கிற ரஸம் நாடகத்தில் கந்தர்வ சாஸ்த்ர தேசிகர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லையே; தேசிகர்களால் என்கிற

பன்மையினல் காத்தர்வ தேசிகர்கள் பலர் இல்லையென்று சொல்லும்பொழுது இந்த ஒரு தேசிகன் மாத்ரம் சாந்த ரஸம் உண்டு என்றால் யார் நம்புவார்கள்?' என்று ஆக்ஷேபம் வேடிக்கையாய்க் காட்டப்படுகிறது. எவ்வளவு சதுரரா யிருந்தாலும், அவர் எப்படி ஆகாசத் தாமரைபோல் இல்லாததான ரஸத்தை அநுபவ கோசரமாகச் செய்யக்கூடும் என்று நடியின் ஆக்ஷேபம். சாந்த ரஸ மில்லை யென்று சொல்லும் தேசிகர்கள் பரத முநியின் பாவத்தின் முடிவைக் கண்டவர்களல்லர். எப்படி வேதங்களுக் கெல்லாம் வேதாந்தத்தினால்தான் முடிவான கருத்து ஏற்படுமோ அப்படியே மற்ற ரஸங்களெல்லாம் பரத முநியின் முடிவான பாவப்படி சாந்தி ரஸத்தில் பர்யவஸாநத்தை அடையும். மீமாம்ஸையின் கபந்தம் அல்லது உடல் என்பர் முன் பாகத்தை; அதன் அந்தத்தைச் சிரஸ் என்பர். மற்ற ரஸங்கள் கபந்தமாகும். சாந்த ரஸம் சிரஸ்ஸாகும். பரத சாஸ்த்ரத்தில் சில முன் பாகங்களை அவர்கள் கண் டிருந்த போதிலும் அந்தச் சாஸ்த்ரத்தின் முடிவும் முக்ய நோக்குமான ப்ரஹ்ம ரஸமான சாந்த ரஸத்தைக் கண்டிலர். இது 'அவர்கள் பரத மதத் தின் கரையைக் கண்டாரல்லர்' என்கிற சொல்லினால் காட்டப்படுகிறது. பரத மதத்தில் நாடகம் பார்க்கும் ஸபையோரிடத்தில் ரஸம் அநுபவ விஷயமாகி அபிவ்யக்தமாகிறது என்று முடிவான தீர்மாநம். ஸபையோர்களிடத்தில் ரஸம் உண்டாகி உல்லாஸ மடைய வேண்டுமானால், மற்ற ரஸங்களைத் தந் மயமாகப் பாவுகர்களாய் அநுபவிக்க ஸபையோர்கள் கூட்டங் கூட்டமாய் மலிந்தாலும் சாந்தி ரஸத்தை அநுபவிக்கும் கூட்டம் துர்லபமாகை யாலும் ஸபையோர் அநுபவத்திற்கு வந்தால்தான் ரஸோல்லாஸம் ஏற்படுவ தாலும் ஸபையோர் அநுபவிக்கும்படி சாந்தியை நடிக்கவும் அபி நயிக்கவும் ஸாத்யமல்லவென்று சாந்தி ரஸம் இல்லையென்று சொன்னவர்களின் பாவம் என்று பூர்வபக்ஷிகள் சொல்லும் ப்ராசீந அபிப்ராயங்களுக்கு விரோத மில்லாமல் ஸமாதாநம் கூறப்படுகிறது; தவிர இந்த நாடகத்தை அநுப விக்கும் ஸபை ஆவர்ஜநமும் செய்யப்படுகிறது. இந்த ஸபையோர் அஸமீசீந பராங்முகர்கள்; இவர்கள் வேறொரு ரஸத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டார்கள். 'ஶ்ருங்காரைகம் ரஸாஸ்வாதநா:' என்று கொண்டா டப்படும் ச்ருங்கார ரஸம் ஸபைக்கு அநுசிதமான வழிகளை அடையும். 'நிதராம் விவாம் அநிதவரஸ்யாநீதி ஹாஸை:' என்கிறபடி எல்லோரும் சேஷத்வத்தை வஹித்துக் கீழ்மையையும் தாழ்மையையும் ஆசைப்படவேண் டிய ஸ்வரூபத்துக்கு விரோதமாக வீரரஸத்தில் ஒருவரையொருவர் திரஸ் காரம் பண்ணுவதே கார்யமாகும். 'வரஸ்ய' என்கிற பதத்தினால் ஸ்ரீ வைகுண்ட ஸ்தவ ச்லோகம் ஸ்மரிப்பிக்கப்படுகிறது. அதையும் ஸாத்வி கர்கள் ஒப்புக்கொள்ளார். அத்புத ரஸம் ஸ்வப்நேந்த்ர ஜாலாதிகளைப் போல்

உலக நடவடிக்கைக்கு விரோதமும் அஸம்பாவிதமுமா யிருக்கும். தத்வத்திலேயே நோக்குடையவருக்கு அது ருசிக்கமாட்டாது. மற்ற ஐந்து ரஸங்களும் அல்ப ஸாரமானவை. அவை சுவைக்கத்தக்கன அல்ல. எட்டையும் தள்ளிவிட்டால் ஒன்பதில் ஒன்ருவது ரஸமாயிருக்க வேண்டியது அவசியமானபடியால் பரிசேஷ ந்யாயத்தால் சாந்தி ரஸம் ஒன்றே ரஸமென்று மீரும்.

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்

[ஸ்ரீ. உப வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(ஸஞ்சிகை 3, 75-வது பக்கம் தொடர்ச்சி)

சில நாட்களுக்கு முன் 'ஜிஜ்ஞாஸா' என்னும் பத்ரிகையில் நடேச சாஸ்த்ரிகள் என்பவர் ஸ்ரீ கண்டாசார்யரைப்பற்றி ஐந்து விஷயங்கள் எழுதியிருக்கிருர். அவை வருமாறு:—1. ஸ்ரீ கண்டர் சங்கராசார்யருக்கு வெகு காலம் பிந்தி உண்டானவர். 2. அவர் சங்கரரைப்போல நிர்விசேஷ ப்ரஹ்மாத்வைதவாதீ. 3. மந்தாதிகாரிகளை உத்தேசித்துச் சங்கரரை அநுஸரித்து, ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஸகுண ப்ரஹ்ம பரமாக வ்யாக்யானம் பண்ணினர். 4. ச்ருதி ஸூக்தி மாலை செய்த ஹரதத்தருக்கு அடுத்தபடி இருந்தார். 5. அவர் ஸ்ரீவைஷ்ணவாசார்யரான ஸ்ரீ பகவத் ராமாநுஜனுக்கு முன்பு இருந்தவர். இந்த ஐந்து விஷயங்களுக்குள் 2, 3, 5-ல் காணப்படும் விஷயங்கள் அநுசிதங்களென்று தோன்றுவதால் அவற்றை விசாரித்துத் தீர்மானிக்கவேண்டியது அவச்யமாக இருக்கிறது.

சங்கராசார்யரைப் போல் ஸ்ரீ கண்டரும் அத்வைத வாதியென்று ஜிஜ்ஞாஸையில் எழுதியிருப்பது அநுசிதம். ஸ்ரீகண்டாசார்யர் ஸூத்ர பாஷ்யத்தில் ஆரம்பணாதிகரணத்தில், 'கார்யமான உலகமானது காரணமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதல்ல' என்று சொல்லிவிட்டு, 'இதரவ்ய......' என்கிற ஸூத்ரத்தில் 'ப்ரஹ்மமே ஜகத்தானல் ஸர்வஜ்ஞனை ப்ரஹ்மமானது தனக்கு ஹிதத்தைச் செய்து கொள்ளாததனாலும் அஹிதத்தைச் செய்துகொண்டதனாலும் விவேகமில்லாததாகப் போய்

விட்டும்' என்று சங்கித்துக்கொண்டு, 'அதிகம் து பேதநிர்தேசாத்' என்கிற ஸூத்ரத்தில் 'கார்யமான உலகத்தைக் காட்டிலும் காரணமான ப்ரஹ்மம் அதிகம் (அதாவது: வேறுபட்டது)' என்று ஸித்தாந்தம் செய்துவிட்டு, கீழ் அபேதத்தையும் இங்கு பேதத்தையும் சொல்வதால் பேதா பேத வாதிமதம் சொல்லப்பட்டதாகிற தென்று சங்கித்துக்கொண்டு, அங்கு 'ஹேதுஹேதுமதோர் விசிஷ்டாத்வைதம் ஸாதயாம:. ந வயம் ப்ரஹ்மப்ரபஞ்சயோ: அத்யந்தபேதவாதின: கடபடயோரிவ த்ரவ்யபேதவாதின: ஸ்ருதிவிரோதாத். ந வா அத்யந்தாபேதவாதின: சுக்திரஜதயோரிவ ஏகதரமித்யாத்வேந தாதாத்ம்யாவிகாரவாதின: ஸ்ருதிவிரோதாத். ந ச பேதாபேதவாதின: வஸ்துவிரோதாத். கிந்து சரீரசரீரிணோரிவ குணகுணிநோரிவ ச விசிஷ்டாத்வைதவாதின:' என்று தாம் அத்வைதியல்ல விசிஷ்டாத்வைதிதான் என்றும், குணகுணி பேதத்தைச் சொல்லுகிற ச்ருதிகள் அத்வைதிகளுக்கு விரோதிக்குமென்றும் தமது வாயினுல் வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறுர். 'அச்மாதிவச்ச' என்கிற அடுத்த ஸூத்ரத்தில் அத்வைத மதத்தைத் தூஷித்திருப்பதும் தவிர அம்சாதிகரணத்தில் 'அம்சோ நாநாவ்யபதேசாத்' என்கிற ஸூத்ரம் தொடங்கி நாலு ஸூத்ரங்களுக்கும் தாத்பர்யமாக அத்வைத மதத்தையே விஸ்தாரமாகக் கண்டித்து எழுதியிருப்பதாலும், ஸ்ரீகண்டர் சங்கராசார்யரை அநுஸரித்து நிர்விசேஷ ப்ரஹ்மாத்வைதவாதீ என்று எழுதியிருப்பது அநுசிதம்தான்.

ஸ்ரீகண்டர் சங்கராசார்யரை அநுஸரித்து ஸகுண ப்ரஹ்ம பரமாக ஸூத்ர வ்யாக்யாநம் செய்திருக்கிறுர் என்று எழுதியிருப்பதும் அநுசிதம். ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் சிவனே பரதேவதையென்றும், தத் த்யாநமே மோக்ஷ காரணமென்றும், விஷ்ணுவைச் சிவ பக்தர் என்றும் கூறியிருப்பதோடு, பராதிகரணத்தில் 'அத: பரஸ்மாத் நாஸ்தி பரமிதி லிங்கம்' என்றும், கார்யாதிகரணத்தில் 'தஸ்மாத் வைதிகாநாம் அத: பரம் உபாஸ்யம் நாஸ்த்யேவ' என்றும் அங்யப்ரதிஷேதாதிகரணத்தில் விஷ்ணுவுக்குச் சிவனேடு ஸாம்யம் கூடக் கிடையாதென்றும் ஸ்ரீகண்டர் எழுதியிருக்கிறுர். ஸ்ரீ சங்காசார்பர் சங்கர பாஷ்பத்திலோ வென்றுல், 'உத்பத்த்யஸம்பவாத்' என்கிற ஸூத்ரத்தில் சைவமதம் அவைதிகமென்றும், அது வேத விருத்தமென்றும் எழுதியிருப்பதுடன் 'யோகிநாமபி ஸர்வேஷாம்' என்கிற கீதா ச்லோக வ்பாக்யாநத்தில், சிவனை உபாஸிப்பவனைக் காட்டிலும் நாராயணனை உபாஸிப்பவனே மிகவும் உயர்ந்தவ னென்றும், பல இடங்களிலும் சிவனையும் சிவனை உபாஸிப்பவனையும் இகழ்ந்து எழுதுகிறுர். கிம் பஹுநா

கீதையில் ஆதிமத்யாவஸாநங்களில் 'போக்தாரம்' [5-ம் அத்.] என்கிற ச்லோகத்திலும், 'உத்தம: புருஷ:' [15-ம் அத்.] என்கிற ச்லோகத்திலும் 'ஸர்வஸ்வஹ்யஸ்வதமம்' [18-ம் அத்.] என்கிற ச்லோகத்திலுமுள்ள 'ஸர்வ' சப்தம் 'ஸர்வஸ்ஸர்வஸ் சிவஸ் ஸ்தாணு:' என்கிற கோசாதிப்ரஸித்தியை அநுஸரித்துச் சிவனைச் சொல்லுகிறதோவென்ற ப்ரமமும் வாராதபடி இங்கு ரக்ஷணைக ஸ்வபாவனான நாராயணனையே சொல்லுகிறதென்று 'ஸர்வ: ஸர்வஸ்ய நாராயணாவ்ய:' என்று சிவபாரம்யத்தை ஸஹிக்காமல் எழுதுகிறதோடு, பாஞ்சராத்ராதிகரணத்தில் 'யோஸஸௌ நாராயண: பரோ ...வ்யூஹ ... பரமாத்மா ஸர்வாத்மா' என்றும், கீதாபாஷ்ய உபநிஷத் பாஷ்யங்களிலும் ஆபாதசூடம் நாராயணனே ஸகுணப்ரஹ்மமென்றும் 'அந்தர் வர்த்தி' ஸூத்ரத்தில் 'ஸகுணம் ஸகுணாநாம் வர்ததே ஸ வாஸுதேவ வர்த்தி ஹ்ருதி' என்று ததுபாஸநமும், 'நிர்குணமாரா உபாஸ்திஹேது:' என்றும் எழுதியிருக்கிறார். கீழ்ச் சொல்லியிருக்கிறபடியே சங்கராசார்யர் அங்கீகரித்திருக்கும் நிர்க்குண ப்ரஹ்மத்தைப் பராதிகரண கார்யாதிகரணங்களில் ஸ்ரீ கண்டாசார்யர் ஸாம்பசிவனுக்கு உயர்ந்தது ஒன்றுமில்லையென்று கண்டித்திருக்கிறார். மந்தாதிகாரிகளுக்கு ஸகுணோபாஸநமென்றும், முக்யாதிகாரிகளுக்கு நிர்க்குணோபாஸநமென்கிற பேதம் ஸ்ரீ கண்ட பாஷ்யத்தில் சொல்லப்படவேயில்லை. ஆகையால் சங்கராசார்யரோடு இவ்வளவு விருத்தாபிப்ராயமுள்ள ஸ்ரீ கண்டாசார்யர் சங்கராசார்யரை அநுஸரித்து ஸகுணப்ரஹ்ம வ்யாக்யாநம் செய்தாரென்பது ஜலம் அக்நியை அநுஸரித்திருக்கிறதென்று சொல்வதை ஒக்கும்.

இனி, ஸ்ரீ கண்டாசார்யர் ஸ்ரீ பகவத் ராமாநுஜனுக்கு முன்பிருந்தவர் என்கிற விஷயத்தையும் முக்யமாக விசாரிக்கவேண்டியது அவச்யமாக இருக்கிறது.

இந்த விஷயத்தில் சாஸ்த்ரிகள் அப்பய்ய தீக்ஷிதருடைய அபிப்ராயத்தையே முக்ய காரணமாக எழுதியிருப்பதால், தீக்ஷிதரின் அபிப்ராயத்தை முந்தி வெளியிட வேண்டியது அவச்யமாகிறது. அப்பய்ய தீக்ஷிதர் பூர்வோத்தர மீமாம்ஸைகளில் விசேஷஜ்ஞாநமுடையவரென்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். ஆனாலும் அவரால் செய்யப்பட்ட ஸ்ரீகண்ட பாஷ்ய வ்யாக்யாநமான சிவார்க்கமணி தீபிகையின் ஆரம்பத்தில் 'யதீயமத்வைதமேவ ஸ்ருதி பரிவாரமிதி' என்று ஆரம்பித்துத் தம் வாயினால் சொல்லியிருப்பதைப் பார்த்தால், அத்வைதமே ஸர்வ ப்ரமாணங்களுக்கும் ஸம்மதமான மதமென்றும், சின்ன பொம்மன் என்கிற அரசனுடைய நிர்ப்பந்தத்தினால்தான் ஸ்ரீ கண்ட பாஷ்யத்துக்கு வ்யாக்யாநம் செய்ய நேர்ந்ததாயும் எழுதியிருக்கிறார்.

அந்யர்களை ஸந்தோஷப்படுத்தித் தந்மூலமான க்யாதி லாபங்களை உத்தே சித்து நாடகாபிநயங்களில் ப்ரவ்ருத்திக்குமவர்கள் அந்தந்த வேஷங்களை வஹிக்கும்போது தந்மயத்வாவஸ்தையை அபிநயித்துக் காட்டுவதுபோல், ப்ரயோஜநாந்தரத்துக்காகப் பரமத க்ரந்தங்களை எழுதுகிற பண்டிதர்களும் வஸ்துத: அந்தந்த மதஸ்தர்களைப் போலவே அவற்றின் தத்வ விசாரங்களி லும் அபிநிவேசத்துடன் எழுதுவது வழக்கம். உதாஹரணமாகத் தீக்ஷிதர் சிவார்க்கமணி தீபிகையில் சிவனே பரப்ரஹ்மமென்றும், விஷ்ணு சிவனு டைய பக்தனாகவும் எழுதியிருப்பதற்கு விபரீதமாக, யாதவாப்யுதய வ்யாக் யாநத்திலும் நயமயூக மாலிகாதிகளிலும் விஷ்ணுவே பரப்ரஹ்மமென்றும், சிவன் விஷ்ணுவினுடைய பக்தனாகவும் எழுதியிருப்பதைப் பல இடங்களிலும் பார்க்கலாம்.

விசேஷ ஜ்ஞாநவான்களும் க்யாதி லாபங்களில் ஆஸ்தையினால் அமார்க் கங்களில் ப்ரவ்ருத்திப்பதுண்டு என்னும் விஷயம் 'தஸ்மிந்ஹ்யதிதே ஹீஷெ களாவாணாம் யஃாஸெ। ஜூாநாநுவீஹவிஷ்யஷி' என்கிறபடியே ஜ்ஞாநமாகிற ஸூர்யனுடைய ப்ரகாசத்துக்குக் காரணமான ஸ்ரீ பீஷ்மர் 'அயஉவஷ்ய வாஷொ உாவொ உாவ ஸ்வயெஉா ந கவஷ்ய ஆஹ। ஸதஷ்ய ஜெதாஹாராஜ ஸஜொஷ்யெஉந களாவெ:॥' என்று தாம் பணத்தில் ஆசையினால் மஹா பாபியான துர்யோதநனுக்கு ஆளா யிருக்கிறதாகவும், பிதாவின் ப்ரீதிக்காகக் காம புருஷார்த்தத்தைக் காற்கடை கொண்டு அம்பா அம்பாலிகா நிர்ப்பந்தத்திலும் தர்மத்தில் ச்ரத்தையினாலே ஸத்ய ப்ரதிஜ்ஞ ராக இருந்த ஸ்ரீபீஷ்மர் சொல்வதாலும், த்ரோணாசார்யாதிகளும் இப்படியே சொல்வதோடு தாம் யுத்தம் செய்ததற்காக 'அவி ஆஹம் வாா விஜெ ம்உஹிஉதொ ஸாஹ்ஷணொ வவெ' என்று தம்மைக் கெட்ட ப்ராஹ்மணனு கச் சொல்லிக் கொண்டதாலும் ஸம்பவிக்கக் கூடியது தான்.

இங்கு அப்பய்ய தீக்ஷிதர், சின்ன பொம்மன் தம்மை 'ஸ்வஜாமாா ணயொஹ்ஸம் வாஹ:' என்று ஸ்ரீகண்டபாஷ்ய வ்யாக்யாநம் பண்ணும்படி இராப் பகல் நிர்பந்தித்ததாகச் சொல்வதாலும், மஹா வேதாந்தியான தீக்ஷிதர் அவ்வரசனைக் குறித்து 'ஸ்ரீதவாரிஜாத:' என்றும் 'வாஹ:' என்றும் வேதாந்த க்ரந்தாரம்பத்தில் நர ஸ்துதியைச் செய்வதாலும், இந்த க்ரந்தத்தின் நிகமநத்திலும் அவ்வரசனை மிகவும் புகழ்ந்து பேசி அவன் தன்னைக்கொண்டு இந்த க்ரந்தத்தை எழுதுவித்ததாக எழுதியிருப்பதாலும், அத்வைத மத நிஷ்டராகத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் இவர் சைவமத க்ரந்தங்களை க்யாதி லாபங்களை உத்தேசித்தே எழுதினாரென்பது வ்யக்தமாகிறது. ஆகை

யால் 'ஸவஜாத்நா வஸவதிம் ஸரணம் வ்ரவஞ:' என்று இவர் எழுதி யிருக்கிறபடியே வீர சைவனென அவ்வாசனுடைய ப்ரீதிக்காகச் சைவ மதத்தையும் அதில் பாஷ்யம் எழுதின ஸ்ரீ கண்டரையும் புகழ்ந்து பேச வேண்டியது அவச்யமானதால் 'வ்ரதைரா ஆயஜரதை:' என்று தாம் கொண்டாடின சங்கராசார்யரை ஸ்ரீகண்டர் அநுஸரித்தவரென்றும், ஸ்ரீகண்ட பாஷ்யத்தைப் பார்த்து ஸ்ரீபாஷ்யகாரர் பாஷ்யம் செய்ததாகவும் எழுதியிருக்கலாம். இப்படி இல்லாவிட்டால் 'ஸிவஸ்யாவிதீயக்வாஹ்யவ மஜெ வைதஞதீநாம் விரொய:' என்று அடியில் தாமே எழுதியிருப் பதற்கு விருத்தமாகவும், கீழ்ச் சொன்னபடியே 'சூஆயஜரதை:' என்று தமது ஆசார்யன் மதமான அத்வைத மதத்தைத் தாமே தூஷித்திருக்கும் ஸ்ரீகண்டர் எப்படிச் சங்கரரை அநுஸரித்தவரென்றும் அத்வைதி என்றும் எழுதக்கூடுமென்பதைப் பண்டிதர்கள் கவனிக்கவேணும்.

இப்படி, தீக்ஷிதருக்குப் பாண்டித்யத்தின் பெருமையினுலோ, ஒரு விஷயத்தில் உண்டான அபிநிவேசத்தாலோ, தாம் நினைத்தபடி யெல்லாம் எழுதுவது ஸஹஜமென்கிற விஷயம் சிவார்க்கமணி தீபிகையின் ஆரம்பத் தில் 'சிவன் என்று சொன்ன சண்டாளனோடு ஸம்வாஸ ஸம்வாத போஜநத் தைப் பண்ணவேண்டியது' என்றும், ஸ்ரீகண்ட பாஷ்ய பாஞ்சராத்ராதிகர ணத்தில் 'பாஞ்சராத்ரம் வேதபாஹ்யம்; அது குண்டகோளாதி விஷயம்; ஜகத்தை மோஹித்துக் கெடுப்பதற்காக விஷ்ணுவினுல் செய்யப்பட்டது; தந்நிஷ்டர் அதம ப்ராஹ்மணர்; கௌதம சாப க்ரஸ்த விஷயம்; அபிசஸ்த பதி தாதிகாரம்; ஏகாயந சாகை கல்பிதம்' என்று இவ்வாறெல்லாம் வாயில் வந்த படி தூஷித்திருப்பதாலும் வ்யக்தமாகிறது.

சங்கரரை ஆசார்ய ரத்நமென்றும் அத்வைதமே தமக்கு மதமென் றும் அவர் செய்த பாஷ்யமே ப்ராமாணிகமென்றும் எழுதியிருக்கிறுர் இவர். சங்கராசார்யர் பாஞ்சராத்ராதிகரணத்தில் நாராயணனே பரதேவதை யென் றும், அபிகமநாதி ஆராதநம் ப்ராமாணிகமென்றும், இவை முதலான அம் சத்தில் பாஞ்சராத்ரம் ப்ரமாணமென்பதில் நமக்கு ஆக்ஷேபமில்லை யென்றும், வேதாநுஸாரியான விஷயங்களைப் பாஞ்சராத்ரம் சொல்வதை அங்கீகரித்து 'ஸஷ்திக்வம்ஸாம்தரம் விஸம்வாதஜ்ஞாநமிதி' என்கிற பாஷ்ய வாக்யத்தினுல் ஏதோ சில பாகம் வேதவிருத்தமாகப் பாஞ்சராத்ரத்தில் இருப்பதாகச் சொல்லுகிறுர். அதையும் தமது மதவிருத்தமான குணகுணி பேதாதிக ளைச் சொல்லுகிறுரே ஒழியத் தீக்ஷதர் சொன்ன தூஷணமெல்லாம் அவருக் குத் தெரியவில்லை. இப்படி, சங்கர மதத்தில் இருந்துகொண்டு சங்கர பாஷ்யத்துக்கு விருத்தமாக எழுதுவது உசிதமாகுமோ? ஆகையால் அபிநி

வேச வசீக்ருத சேதஸ்கர்களான வித்வான்கள் ப்ரமாணமில்லாமல் எழுதுவ தெல்லாம் அங்கிகரிக்கக்கூடியதாகாது.

இது நிற்க: ஸ்ரீகண்ட பாஷ்யம் முந்தின தென்பதற்குச் சாஸ்த்ரிகள் எழுதியிருக்கும் யுக்திகளைக் கவனிப்போம். நடேச சாஸ்த்ரிகள் பத்ரிகையில் ப்ரக்ருத விஷயத்தை ஸ்தாபிக்க யுக்திகளைத் தாம் சொல்ல ஆரம்பித்து, ஸ்ரீகண்ட பாஷ்யத்தில், 'வ்யாஸஸூத்ரமிதம் நேத்ரம் விதுஷாம் ப்ரஹ்மதர்சநே । பூர்வாசார்யை: கலுஷிதம் ஸ்ரீகண்டேந ப்ரஸாதிதம்' என்கிற ச்லோகத்திலிருக்கிற 'பூர்வாசார்ய' சப்தத்திற்கு, இப்பொழுது பாஷ்யம் செய்தவர்களுக்கு உபதேசித்தவர்களான முன் இருந்த ஆசார்யர்களை உத்தேசித்து 'பூர்வாசார்யை: கலுஷிதம்' என்று ஸ்ரீகண்டர் சொன்னதாகத் தீக்ஷிதர் வ்யாக்யாநம் செய்திருப்பதால் ஸ்ரீராமானுஜாதி பாஷ்யங்கள் அக்காலத்தில் இருக்க ந்யாயமில்லை யென்று எழுதியிருக்கிறார். இங்கு ப்ரமாணம் காட்டாமல் தீக்ஷிதர் இப்படி எழுதியிருப்பதால் கீழ்ச் சொன்னபடியே இதை நாம் அங்கீகரிக்க ந்யாயமில்லை. ஆனாலும் இது அஸங்கத மென்பதையும் காட்டுவோம்.

இங்கு வ்யாஸ ஸூத்ரமாகிற கண்ணைப் பூர்வாசார்யர்கள் குத்திக் கெடுத்துவிட்டதாக ஸ்ரீகண்டர் எழுதுவதால் 'பூர்வாசார்ய' சப்தம் ஸ்ரீகண்டருக்கு முன்பு ஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்தவர்களைத்தான் சொல்லவேணும். சங்கர பாஷ்யம் ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கு அநுகுண மென்றும், ஸ்ரீ ராமானுஜாதி பாஷ்யம் பிந்தி உண்டானதென்றும் சொல்லும் தீக்ஷிதருக்கு வேறு எந்த பாஷ்யம் முந்தி இருந்ததென்று சொல்ல முடியும்? த்ரமிட பாஷ்யத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதாகச் சொல்வதும் அநுசிதம். அப்படி த்ரமிட பாஷ்யகாரரை ஸ்ரீகண்டருக்கு முந்தினவராக அவர் ஒப்புக்கொண்டிருந்தால் உதாஹரணம் காட்டு மிடத்தில் த்ரமிட பாஷ்ய பங்க்திகளையே அநுவதித்துக் காட்டவேண்டும். அப்படிக் காட்டாமல் ஸ்ரீபாஷ்ய பங்க்திகளையே உதாஹரித்திருப்பது உசிதமாகுமா? ஒரு க்ரந்தத்தைத் தூஷிக்குமவர்கள் மற்றொரு க்ரந்தத்தைத் தூஷணத்துக்கு உதாஹரிக்கக் கண்டதுண்டோ? ஆகையால் உலகத்தில் ஜ்ஞாநமில்லாத ஒரு மனிதனை அழகாகத் தூஷிக்கத் தெரிந்த ஒருவன் 'நீ தெரியாதவனல்ல; உனக்கு இப்படி உபதேசம் பண்ணினவன் தெரியாதவன்' என்று தூஷிப்பது போல ஸ்ரீகண்டர் ஸ்ரீபாஷ்யகாரரை உத்தேசித்தே 'பூர்வாசார்யை: கலுஷிதம்' என்று சொல்லித் தூஷித்திருப்பதைப் பரதூஷணத்திலும் பண்டிதரான தீக்ஷிதர் ஸ்ரீபாஷ்யகாரருக்கு உபதேஷ்டாக்கள் ஸூத்ரத்துக்கு விபரீதார்த்தம் பண்ணிவிட்டதாக எழுதியிருக்கிறார் என்று தாத்

பர்யம் சொல்வது உசிதமாகும். இல்லாவிட்டால் தீக்ஷிதர் பாஷ்யம் செய்தவர்களுக்கு உபதேஷ்டாக்களின் வாக்யங்களை அங்கு உதாஹரிக்காமல் பாஷ்யகாரர் பங்க்திகளை ஏன் உதாஹரித்தாரென்று கேட்டால் பதில் சொல்ல முடியாது.

ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்ய விஷயங்களையே ப்ராயேண எடுத்துக் கண்டித்திருப்பதுபோல், அத்வைத பாஷ்யமும் அநேக இடங்களில் கண்டிக்கப்பட்டிருப்பதால், சங்கராசார்யரையும் சேர்த்து ஸூத்ரங்களுக்கு விபரீதார்த்தம் பண்ணின பூர்வாசார்யராகச் சொல்ல வேண்டியது ந்யாயமாக இருக்க, உதாஹரணத்தில் தீக்ஷிதர் சங்கர பாஷ்யத்தில் காலுஷ்யமில்லையென்று ஸமர்த்தித்திருப்பதால் அவருடைய பக்ஷபாதம் வெளியாகிறது. இதனால் ஆநந்தலஹர்யாதிகளில் 'தத்ர-காரணை ப்ரவர்த்தஸ்ரீ' என்று எழுதியிருப்பதும் ப்ரமாண மில்லாததனால் அநாதரணீயம்.

இதன் மேல் ஜிஜ்ஞாஸையில் சாஸ்த்ரிகள் பாசுபதாதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில், 'ஸம்ஹாரபிவாதி' சப்தங்கள் நாராயணாநுவாகத்தை அநுஸரித்து நாராயணனையே சொல்வதாக ஸ்ரீபகவத் ராமாநுஜன் வ்யாக்யாநம் செய்திருக்கிறபடியாலும், ஸ்ரீகண்ட பாஷ்யத்தினுடைய பாசுபதாதிகரணத்தில் இதை அநுவதித்து ஸ்ரீகண்டர் தூஷிக்காததனால் ஸ்ரீகண்ட பாஷ்ய காலத்தில் ஸ்ரீ பாஷ்யம் இருக்கவில்லையென்று எழுதியிருக்கிறார். இது மிகவும் அநுசிதம். ஸ்ரீகண்டர் அடியிலேயே 'ஸுந-வவதேஷ்த ந ஸாஸீஸ:' என்கிற ஸூத்ரத்தைத் தனி அதிகரணமாக்கி, அதில் நாராயணாநுவாகத்தை எடுத்து அதையே முழுவதும் சிவபரமாக அர்த்தம் பண்ணிவிட்டு, மேல் ஸூத்ரங்களில் நாராயண பரத்வத்தை விஸ்தாரமாகத் தூஷித்துவிட்டபடியினால் மறுபடி பாசுபதாதிகரணத்தில் இரண்டாம் தடவை மேற்படி ராமாநுஜ பாஷ்ய பங்க்தியை அநுவதித்துத் தூஷிக்கவில்லை. ஆகையால் இங்கு சாஸ்த்ரிகளுக்கு விபரீதமாக ராமாநுஜ பாஷ்யமே முந்தியதென்பதற்குச் சாரீராதிகரணத்தில் ஸ்ரீகண்டர் ஸ்ரீபாஷ்ய விஷயத்தை அநுவதித்துத் தூஷித்திருப்பதே காரணமாகிறது. தவிரவும், ஸ்ரீபகவத் ராமாநுஜன் பாசுபதாதிகரணத்தில் சைவ மதத்தைத் தூஷித்திருப்பதாயும் ஸ்ரீகண்டர் அதைத் தூஷிக்காததனால் ஸ்ரீகண்டர் முந்தி இருந்ததாகச் சாஸ்த்ரிகள் அபிப்பிராயப்படுவதும் உசிதமல்ல. ஏனென்றால், சங்கர பாஷ்யத்தில் 'கெவலும் நிமித்தகாரணமீதெஷ வக்ஷ: வெதாந்த விஹித ஜ்ரஹெகுக்வ ப்ரதிவக்ஷக்வாத்யதெநாத்ர ப்ரதிஷியதெஸா அயம் வெதஸாஹெஸ்வரக்வநா' என்று சொல்லியிருப்பதைப்போல் ஸ்ரீபாஷ்யத்

தில் சிவன் நிமித்த காரணமாத்ர மென்கிற சைவாகமாதிகளை அநுவதித்துத் தூஷித்திருக்கிறது. சங்கர பாஷ்ய வ்யாக்யாநங்களான பாமதீ, ந்யாய நிர்ணயாதிகளில் ‘ஊஹெஸ்வராஸ்தூ’ என்கிற சங்கராசார்ய பாஷ்யத்துக்கு அவர்கள் நான்கு விதமென்று வ்யாக்யாநம் செய்திருப்பதுபோல் ஸ்ரீபாஷ்யத்திலும் காபாலாதி பேதம் சொல்லப்பட்டிருக்கிறது. ஹமாஸநயஷூாந ஸூராகூஹ வஜைந உஜூிகாஷ்டீ தாரணுதிகள் ஸ்ரீ பாஷ்யத்தில் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ கண்ட பாஷ்யத்தில் பாசுபதாதிகரணத்திலும் சிவனுக்கு நிமித்த காரணத்வ மாத்ரத்தைச் சில சைவாகம நிஷ்டர்கள் சொல்லுவதாகவும், அவர்கள் அதன் அபிப்ராயம் தெரியாதவர்களென்று தொடங்கி, ‘ஸவஉயா ந கெவஎுஉீஸ்வரொ நிமித்தமிதூஷாகஂ ராஜாஹஃ’ என்று சிவனுக்கு உபயவித காரணத்வமும் வேத ப்ரமாண ஸித்தமென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இங்கு, தீக்ஷிதர் கீழ், பாஷ்யங்களில் சொல்லப்பட்ட காபால காளாமுகாதிகளை அநுவதித்து ‘வாஊஅாாரயாகூதயா ஸளஅ வஜிஉ தஸூ ஞாமஜவாஸூவதகாவாமிககாஞாஊவாஷெரெவ ஈள உாம உஸூ சுவெதிகசுவ வரதிவாஉநாகஃ’ என்று பகாஸந த்யாக ஸுராகும்ப பூஜநாதி விபரீதாசாரங்களைச் சொல்லுகிற சைவமதம் அவைதிகமென்றும், ஸ்ரீ கண்டர் சொல்லுகிற சைவமதம் அதைக்காட்டிலும் வேறுபட்டது, இது வைதிக மதமென்றும் வ்யக்தமாக எழுதியிருக்கிறார். ஆகையால் ஸ்ரீ பகவத் ராமாநுஜனால் தூஷிக்கப்பட்ட சைவமதம் வேறு; ஷெ அநாசாராதிகளை ஸ்ரீ கண்டர் சொல்லாததனாலும் உபய காரணத்வத்தைச் சிவனுக்கு ஸ்தாபித்திருப்பதாலும் இந்தச் சைவமதம் வேறு என்பது வ்யக்தமாக இருப்பதால் ‘ஜிஜ்ஞாஸா’ பத்ரிகையில் ஸ்ரீகண்டாபிப்ராயத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் தூஷித்திருப்பதாக எழுதியிருப்பது மிகவும் அநுசிதமாகும்.

ஸ்ரீகண்டருக்கு முந்திச் சைவமத க்ரந்தங்கள் இல்லையென்று ப்ரமித்து, ஸ்ரீ பாஷ்யத்தில் சைவ மதத்தைத் தூஷித்திருப்பதால் ஸ்ரீ கண்ட பாஷ்யத்தைத் தான் ஸ்ரீ பகவத் ராமாநுஜன் தூஷித்திருப்பதாக எழுதத் துணிந்த சாஸ்த்ரிகள் ஸ்ரீ சங்கர பாஷ்ய வ்யாக்யாநங்களான ரத்ந ப்ரபா ஆநந்தகிர்யாதிகளில் ‘உதுதயஸஂ ஹுவ’ ஸூத்ராரப்பத்தில் ‘வஂஅவஉாயஉவாதி ஊஹெஸ்வரஉத நிராஸாநஞரஂ அதஸூவஉஹவாஉஂ, ஸஜிஷ்ஂ நிரஸ்யதி’ என்றும், ‘ஊஹெஸ்வரஉதநிராஸாநஞரஂ வெஷ்ணவஉதஂ நிரஸ்யதி’ என்றும் சங்கரபாஷ்யத்துக்கு அவதாரிகை வைத்திருப்பதாலும் ‘யெஷாஂ நிமித்தகாரண ஊீஸ்வரொஹிஉதஃ தெஷாஂ வக்ஷஃ வரதூாவதூாதஃ’ என்று சங்கராசார்யர்

எழுதியிருப்பதாலும் ஸ்ரீகண்ட பாஷ்யம் சங்கர பாஷ்யத்துக்கு முந்தினதென்று ஏன் எழுதவில்லையோ தெரியவில்லை. இதனால், உபநிஷதர்த்த விசாரணத்துக்காகவே அருளிச்செய்யப்பட்ட வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அதர்வ சிகையினுடைய விசார ப்ரகரணத்தில் சிவனுக்கு ஸர்வாந்தர்யாமித்வம் இல்லையென்று சொல்லியிருப்பதாலும், தத் வ்யாக்யான ச்ருத ப்ரகாசிகையில் 'உபாதாநம் த' என்கிற ச்லோகத்தை எடுத்துச் 'சில அவைதிகர்கள் பகவானுக்கு உபாதானத்வத்தையும் ருத்ரனுக்கு நிமித்த காரணத்வத்தையும் சொல்லுகிறார்கள். அவர்களைக் கண்டிக்கிறார்' என்று அருளிச் செய்திருப்பதாலும், ஸ்ரீகண்ட பாஷ்யத்தையே கண்டிப்பதாக எழுதியிருப்பதும் ஒருவாறதொ நிரஸ்தமாயிற்று.

அங்கு வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் தத் வ்யாக்யானத்திலும் ஸ்ரீ கண்டருடைய பெயராவது ஷை பாஷ்யமென்றாவது அல்லது தத்பாஷ்ய பங்க்த்யநுவாதமாவது ஒன்றுமில்லாமலிருப்பதோடு சிவனுக்கு நிமித்த காரணத்வ மாத்ரத்தைச் சொல்லுகிறவர்களை அவைதிகர்களென்று தூஷித்திருப்பதால், இந்தத் தூஷணத்தைச், சிவனுக்கு நிமித்த காரணத்வ மாத்ரத்தை ஒப்புக்கொள்ளாதவராயும் அப்பய்ய தீக்ஷிதரால் 'சிவன் நிமித்த காரண மாத்ரமென்று சொல்லுகிறவர்கள் அவைதிகர்கள், ஸ்ரீ கண்டரல்லர்' என்று சொல்லப்பட்டவருமான ஸ்ரீகண்டாசார்யர் தலையில் சுமத்துவது உசிதமாகாது. 'உபாதாநஞ்ச' என்கிற ச்லோகத்தை ஸ்ரீகண்டர் எழுதியிருப்பதைக்கொண்டு அதை அவர் செய்ததாகச் சொல்லவும் முடியாது. இந்த ச்லோகம் வ்யோமாதீதவாதிகளான சைவ க்ரந்தங்களில் இருப்பதாக வ்யாஸாசார்யாதிகள் அநுவதித்திருப்பதால் இதன் தூஷணம் ஸ்ரீ கண்டாசார்யரின் விஷயமன்று. அந்தர்யாம்யதிகரணத்தில் அதர்வசிகை உபநிஷத்தைக் கொண்டு ஸ்ரீகண்டர், ருத்ரனே ஸர்வாந்தர்யாமி என்றும், வாக்யாந்வயாதிகரணத்திலும் ஸ்ரீ கண்டர் இதையே ஸ்தாபித்திருப்பதாயும், இதை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் பாஷ்யகாரர் தூஷித்து நாராயணனுக்கே அந்தர்யாமித்வத்தை நிச்சயித்திருப்பதால் ஸ்ரீ பகவத் ராமாநுஜன் பிந்தினவரென்றும், ஸ்ரீகண்டர் பிந்தி உண்டானவரில்லையாகையினால் ஷை அந்தர்யாம்யதிகரணாதிகளில் ஸ்ரீகண்டர் ஷை ஸ்ரீ ராமாநுஜ தூஷணங்களுக்குப் பதில் சொல்லவில்லையென்றும் சாஸ்த்ரிகள் எழுதியிருப்பது அநுசிதம். ஒருவர் ஒரு விஷயத்தை ஓரிடத்தில் தூஷித்திருந்தால், அதைத் தூஷிக்கும் மற்றொருவர் அந்த இடத்திலேயே அதைத் தூஷிக்க வேணுமென்று நிர்ப்பந்தமுண்டோ? ப்ரஸக்தி உண்டானால் மற்றோரிடத்திலும் தூஷிக்கலாமென்பது லோகாநுபவ ஸித்தம்.

தவிர, ஸ்ரீபகவத் ராமாநுஜன் வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் அந்தர்யாம்யதிகரணத்திலும் சொன்ன நாராயணனுடைய அந்தர்யாமித்வத்தை ஸ்ரீகண்டர் ஷ்டி அதிகரணத்திலேயே விஸ்தாரமாகக் கண்டித்திருப்பதால் ஸ்ரீகண்ட பாஷ்யமே பிந்தியதாகும். தயாஹி—ஸ்ரீகண்டர், 'அந்தர்யாமி விராட் புருஷனாக இருக்கலாம்; அவன் சேதநாசேதநங்களுக்கு உபாதாநமாகையினால் ஸர்வஹ்ருதந்தர்வர்த்தித்வேன யுக்த:' என்று சங்கித்துக் கொண்டு, 'ந ச ஸ்மார்தம்.........ஶாரீரஶ்ச' என்கிற ஸூத்ரத்தில், சாரீரனை விராட் புருஷனுக்கு அந்தர்யாமித்வம் கூடாதென்று தூஷித்துவிட்டு, சிவனுக்கே அந்தர்யாமித்வத்தை ஸ்தாபித்திருக்கிறார். அங்குத் தீக்ஷிதர், விராட் புருஷன் நாராயணனென்று வ்யக்தமாகச் சொல்லியிருப்பதுடன், 'ஶாரீராதிகரணே நாராயணவிஷயதயா வ்யாக்யாதம் ஶாரீரவதிஹாபி தத்விஷயதயா வ்யாக்யேயம்' என்று நாராயணன் அந்தர்யாமியல்லவென்று தெரிவிப்பதற்காகவே வ்யாஸர் 'ஶாரீரஶ்ச' என்று ஸூத்ரத்தில் சாரீர சப்தத்தைச் சொன்னதாக எழுதியிருக்கிறார். ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் வாக்யாந்வயாதிகரணத்திலும் ருத்ரனே ஸர்வாந்தர்யாமி என்பதை விஸ்தாரமாக எழுதிவிட்டு, கடைசியில் விஷ்ணுவினிடத்திலும் ருத்ரன் அநுப்ரவேசித்திருப்பதால் விஷ்ணு சப்த வாச்யனும் ருத்ரனே என்று எழுதியிருக்கிறது. ஆகையால் ஸ்ரீ பகவத் ராமாநுஜன் அருளிச்செய்ததற்கே ஸ்ரீகண்ட பாஷ்யம் கண்டநமாக இருப்பதால் ஸ்ரீகண்ட பாஷ்யமே பிந்தினதாகும்.

இங்கு அதர்வசிகையினுடைய வாஸ்தவார்த்தத்தை உபநிஷத் பாஷ்யத்திலும் வேதாந்த கௌஸ்துபத்திலும் கண்டு தெளிந்தவர்களுக்குப் பூர்வோத்தர விரோதமே தோன்றாது. இப்படியே ப்ரத்யதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீபகவத் ராமாநுஜன் உதாஹரித்த ஸுபாலோபநிஷத் வாக்யத்தை எடுத்து ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் கண்டிக்காததனால் ஸ்ரீகண்ட பாஷ்யம் முந்தினதென்பதும் அநுசிதம். இங்கு ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் ருத்ர பரமாக எடுத்திருக்கும் வாக்யங்களை ஸ்ரீ ராமாநுஜன் எடுத்துக் கண்டிக்காததனால் ராமாநுஜ பாஷ்யமே முந்தினதென்று ப்ரதிபந்தி கேட்டால் சாஸ்த்ரிகள் என்ன பதில் சொல்லுவரோ தெரியவில்லை: ருத்ரபரமான வாக்யங்கள் தமக்கு அநுகூலமல்லாததால் எடுக்கவில்லையென்று ஸமாதாநம் சொன்னால், அப்படியே 'விஷ்ணுபரமான வாக்யங்கள் தமக்கு அநுகூலமில்லாததால் ஸ்ரீகண்டரும் ஸுபாலோபநிஷத்தை எடுக்கவில்லை. அதைத் தூஷிக்க ஸாத்யமில்லாததனால் அவைகளைத் தூஷணீய கோடியிலும் ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் எடுக்கவில்லை' என்று சொல்லலாம். ஆகையால் இம்மாதிரியான வார்த்தைகள் பாஷ்யங்களுடைய பௌர்வாபர்யத்துக்கு நியாமகங்களாகமாட்டா.

இதைப்போலவே மற்றும் ஸ்ரீகண்டர் தம்முடைய ஜ்ஞாந சக்திக ளுக்கு அநுகுணமாக ஸ்ரீபாஷ்யாதிகளைக் கண்டித்திருப்பதைக் கவனியா மல் சாஸ்த்ரிகள் அதிக ஆஸ்தையினால் ஸ்ரீகண்டர் கண்டிக்கவில்லை யென்று எழுதியிருப்பதையும் மற்றும் சில உபய ஸாதாரண தூஷணங்களையும் இங்கு எழுதுவது அதிக க்ரந்த விஸ்தாரத்தை உண்டுபண்ணுவதாலும், ப்ரபலமான யுக்தி விரோத மில்லாததனாலும் நாம் இதற்குமேல் எழுதப்பட்ட விஷயங்க ளில் உதாஸீநராகிறோம். சாஸ்த்ரிகள் எழுதியிருக்கும் சில விஷயங்கள் யுக்திக்குப் பொருந்தாமலும் இருக்கின்றன. உதாஹரணமாய்: ஸ்ரீராமாநுஜ ருடைய மருமகன் பேரனுடைய சிஷ்யராக இருப்பதால், ஸுதர்சநாசார்யர் ராமாநுஜனுக்குப் பிறகு இரண்டு தலைமுறைக்குள் இருந்திருக்க வேண்டு மென்று எழுதியிருக்கிறது. இவர் எப்படி இரண்டாம் தலைமுறை ஆகக் கூடுமென்று தெரியவில்லை, இதைப் பண்டிதர்கள் கவனிக்கவேணும்.

ப்ரஹ்மத்துக்கு உருவம் கிடையாதென்பது ஸ்ரீகண்டரின் அபிப்ரா யம் என்று (31-ம் பக்கத்தில்) எழுதியிருக்கிறது. ஸ்ரீகண்டர் ப்ரஹ்மத்தை 'கூரஷ விம்மஷம் த்ரிணேத்ரம் நீலகண்டம்' என்றும், ப்ரஹ்மத்துக்குத் தேஹ மிருப்பதாக எழுதியிருப்பதால் உருவமென்பது தேஹமென்று சொல் லக்கூடாது. மேலே காட்டியிருக்கும் ப்ரமாணங்களைப் பார்த்தால் 'ஸ்வரூபத் துக்குப் பரிணாமமில்லை' என்கிற விஷயத்தை 'உருவமில்லை'யென்று எழுதி யிருப்பதாகத் தெரிகிறது. இதைச் சங்கராசார்யரும் ஸ்ரீபகவத் ராமாநுஜ னும் யாதவப்ரகாசர் தவிர மற்றவர்களும் அங்கீகரித்திருப்பதால், ஸ்ரீகண்டர் அபிப்ராயமென்று எழுதினதற்கு விசேஷமில்லை. இதைக்கொண்டு சாஸ்த்ரி கள் ஸ்ரீகண்டருக்கு நிமித்தோபாதானங்களுக்குப் பேதத்தை ஸ்ரீகண்டரின் அபிப்ராயமென்றும், ஸ்ரீராமாநுஜன் அதைக் கண்டிப்பதாகவும் எழுது கிறார். இது வாஸ்தவமானால் ப்ரக்ருத்யதிகரணாதிகளில் நிமித்தமும் உபா தானமும் ப்ரஹ்மமே என்று பல இடங்களில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீகண்ட பாஷ்யங்களுக்கு என்ன கதி என்பதைச் சாஸ்த்ரிகள் தெரிந்துகொள்ள வில்லை போலும். உலகத்தில் ஒரு மனிதன் தன் சக்தியினால் செய்த கார் யத்தை வேறொரு வஸ்து செய்ததாகச் சொல்லாமல் தானே செய்ததாகச் சொல்வது வழக்கம். அப்படியே ஸ்ரீகண்டரின் மதப்படி சிவனுடைய சக்தியான விஷ்ணு உபாதாந மாகையினால் சிவனே உபாதாநமென்று ப்ரக் ருத்யதிகரணாதிகளில் ஸ்தாபித்திருக்கிறார். ஸ்ரீ பகவத் ராமாநுஜன் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் சிவனுடைய சக்தி விஷ்ணு வென்று ஸ்ரீகண் டர் சொல்வதை அநுவதித்துத் தூஷித்தவரல்லர். சிவ புராண சிவ கீதாதிகளில் சொல்லப்பட்ட சைவ மதங்களில் சொல்லும் சிவனுடைய நிமித்த காரணத்வத்தைத் தூஷித்திருக்கிறாரென்பதை முன்பே சொன் னோம். ஆகையினால் இதைக் கொண்டு ஸ்ரீகண்ட பாஷ்யம் முந்தினதா கச் சொல்வது ஸாத்யமன்று. ஆகையினால் நடேச சாஸ்த்ரிகள் ஸ்ரீகண்ட பாஷ்யம் முந்தியதென்பதற்காக எழுதி யிருக்கும் யுக்திகள் பொருந்தாமல் இருப்பதாலும், சில யுக்திகள் விபரீதங்களா யிருப்பதாலும் அவை புத்தி மான்களால் ஆதரிக்கக் கூடியனவல்ல.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

# ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடைய தத்வ விசாரத்தைப்பற்றிய விமர்சம்.

[ஸ்ரீ உப. வித்வான் த. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர், ந்ருஸிம்ஹபவநம், திருச்சி.]

(ஸஞ்சிகை 3, 80-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ப்ராமாணிகமான பதார்த்தம் தத்வமெனப்படும். தத்வங்கள், சித் அசித் ஈச்வரன் என மூன்று விதமாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ தேசிகனுக்கு ஸர்வ சாஸ்த்ரங்களிலும் அப்ரதிஹதமான புத்தி ப்ரஸரமிருப்பதுடன், வேதாந்த சாஸ்த்ரத்தில் அஸாதாரணமான ப்ரஜ்ஞை என்பது யாவராலும் மறுக்கமுடியாதது. ஸ்ரீ ஸ்வாமியே அதிகரணஸாராவளி க்ரந்தோபக்ரமத்தில் ‘விஶ்வஸ்மை தாஸ்ய ரூவாணவ்ய விஹிதவதா தேந தேவேந த்தம் வேதாந்தார்ய ஸ்ஞாவஹிதபவிஸ்தாய ஸங்க்யாய யாஸி’, என்று தமக்குள்ள வேதாந்த சாஸ்த்ர ப்ரஜ்ஞா பலத்தைத் தாமே கண்டோக்தியினால் ப்ரகாசப்படுத்தி யிருக்கிறார். ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்திலும் ‘ஸவஷிஸ்ய கிவய்யஷ விஷ்ணு நிமாந்தேஷு நிரூமளரவேண। வ்ரிஹதூஹிதாஹித: வ்யொம: ஸுவிநா காரணிகேந ஸுவிதொஸள ॥’ என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் தமக்கு இருக்கும் அநிதர ஸாதாரணமான பாண்டித்யத்தையும் உபதேச சக்தியையும் அந்யோக்தி வ்யாஜேந வ்யாக்யாநம் செய்தருளினார். உலகத்திலுள்ள பதார்த்த ஸ்வரூப ஸ்வபாவ விஷயங்களில் தமக்கு யதாவத்தாக இருக்கும் விஜ்ஞாந பலத்தை ஹம்ஸஸந்தேசம் யாதவாப்யுதயம் ஸுபாஷிதநீவி முதலிய க்ரந்தங்களாலும் நாடக க்ருதியினாலும் ப்ரகாசிக்கச் செய்து, பற்பல த்ரமிட பாஷா ப்ரபந்த நிர்மாணத்தாலும் ப்ராக்ருதீ மாகதீ முதலிய பாஷாமயமான ஸ்தோத்ர க்ரந்தம் முதலியவைகளாலும் ‘ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர்’ என்கிற பிருதத்தை உலகத்தில் நிலை நாட்டி, சாஸ்த்ர பாரங்கதர்களான வித்வச் சிகாமணிகள் எல்லோரும் தம்முடைய அவாங்மநஸ கோசரமான வைதுஷ்ய ப்ரபாவத்தை அநுமோதிக்கச் செய்வித்தார். ஸ்வாமிக்கு ஸாஹித்ய மார்க்கத்

திலும், ஸர்வ வித பாஷைகளிலும், தர்க்கம் முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் அனைத்திலும் விசிஷ்ட புஷ்கலமான பாண்டித்ய மிருந்த போதிலும், இவைகளால் தமக்கு க்ருதார்த்ததையைப் பாவிக்கவே இல்லை. குரு ப்ரஸாதநத்தால் நிரர்க்களமாக ப்ரவஹிக்கிற வேதாந்த சாஸ்த்ர விஜ்ஞாந ஸ்ரோதா ஸ்ரோதஸ்ஸில் தாம் காடாவகாஹநம் செய்து, ஆநந்த பாரவச்யத்தை அடைந்ததனாலேயே ஜந்ம ஸாபல்யத்தை அடைந்ததாக ஸ்வாமி பாவித்தார். ஸத்வஸ்தர்களுக்கு அநுஸந்தேயங்களான ஸாரதமார்த்தங்களில் முக்யமான பரதத்வ விஷயகமான விசாரம் எந்தமட்டில் ஸ்வாமியினால் ப்ரமாணங்களாலும் ந்யாயங்களாலும் உபப்ருஹ்மிதமாக விஸ்தரிக்கப்பட்டு, எவ்விதமான நிஷ்கர்ஷத்துடன் முடிவடைந்திருக்கிற தென்பதையும், பரதத்வ விஷயமான விசாரமானது இதர மதஸ்தர்கள் எல்லோராலும் விசேஷமின்றிச் செய்யப்பட்டிருக்க, அவைகளைவிட ஸ்வாமியின் விசார ப்ரக்ரியை எந்த விதத்தால் உத்கர்ஷமுள்ள தென்பதையும், ஸ்வஸித்தாந்த ஸித்தமான சிதசித் விசிஷ்டாத்வைத தத்வமானது எவ்வாறு ஸ்தூணாநிகநந ந்யாயத்தால் ஸ்வாமியினால் த்ருடீக்ருதமாயிற்று என்பதையும் விசாரிப்போம்.

வேதாந்தங்கள் பரதத்வ ஸ்வரூபத்தை நிச்சயிக்கத் தொடங்கி, ஸ்வரூப நிரூபக தர்மங்களான ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வ ஆநந்தத்வ அமலத்வ தர்மங்களால் ஒருவிதமாகத் தத்வ ஸ்வரூப நிரூபணம் செய்தும், அந்த வஸ்துவானது ஸத் தத் ப்ராஹ்ம முதலிய சப்தங்களால் ஸாமாந்யமாகச் சொல்லப்பட்டிருப்பது பற்றி வ்யக்த்யந்தரங்களும் இவைகளுக்கு வாச்யமாகக்கூடுமாதலால் பரதத்வ மின்னதென்று சொல்ல முடியாமல் போகவே ஸத்ப்ராஹ்மாதி சப்தங்களுக்கு நாராயணாநுவாகாதிகளில் படிக்கப்பட்டிருக்கிற 'நாராயண' 'புருஷ' என்கிற விசேஷ சப்தங்களில் பர்யவஸாநத்தை அங்கீகரித்தும், நாராயண அல்லது புருஷ சப்தத்திற்கு எவன் வாச்யனோ அந்த வ்யக்தியே பரதத்வமென்று நிச்சயம் வந்தபோதிலும், அந்த வ்யக்தி எது என்று ஆலோசிக்குமிடத்து, ஸந்தேஹாபாதகங்களான பற்பல ச்ருதி வசநங்களால் பரதத்வ நிச்சயத்திற்குத் தடுமாற்ற முண்டாகவே தேவதாந்தர வ்யாவர்த்தகமான ஸ்ரீ ஸம்பந்தத்தை அவலம்பித்து எது ஸ்ரீ விசிஷ்டமோ அதுதான் பரதத்வம் என்று நிச்சயித்தன. வேதாந்தங்களுக்கு எந்த ஸ்ரீ ஸம்பந்தத்தால் பரதத்வ நிர்ணயம் பிறந்ததோ அந்த ஸ்ரீ தத்வ ஸ்வரூபத்தை முற்றிலும் அழிக்க எண்ணம் கொண்டவர்களை உத்தேசித்து ஸ்வாமி அபேத்யங்களான ப்ரமாணங்களாலும் ந்யாயங்களாலும் உபஸ்கரிக்கப்பட்டுள்ள வாசோயுக்திகளை வெளியிட்டு ஸ்ரீ தத்வவிசாரம் செய்திருப்பது வித்வந் மாநஸோல்லாஸகர மானது. சதுஃச்லோகீ பாஷ்யத்தில் 'யெ

வஹநாஹ: ஸ்ரீநஜா ஹவதஃ ஸவகதஊாயிஷெயா வ்ருகூரதிமிதி, யெஅதவதூ ஸதாஹ ஞாவ ஹாமக்த்' என்று தொடங்கி 'ஸவ்ருதிவஷஸாஷா ஷவிஶெஷஉதி' என்கிற வாக்யத்தை முடிவில் கொண்டிருக்கிற ஸ்ரீதத்வ விசார பரிபாடியினுல் ஸ்வாமியின் மேதையும் கல்பநா சக்தியும் தர்க்க பாண்டித்யமும் அபிஜ்ஞர்களுக்கு நன்கு வெளிப்படும். ஸ்ரீதேவியின் கடாக்ஷத்தை இழந்தவர்கள் ஸ்ரீயை அசேதநவஸ்து வென்றும், நாராயணனுடைய ஸத்தை என்றும், அஹந்தை என்றும், ப்ரபை என்றும், சக்தி என்றும், வித்யை என்றும், இச்சை என்றும், போக்த்ருத்வமென்றும், மற்றும் பற்பல விதமாகவும் சொல்லுகிறார்கள் என்று ஸ்வாமி அந்தத் துர்வாதிகளுடைய உக்திகளை அநுவதித்து, நிர்ப்பாதமான சேதந வ்யபதேசத்தால் அந்தந்த சாஸ்த்ரங்களாலேயே அவரவர்களுக்கு நிராஸம் வந்திருக்கிறதென்று சொல்லி, அதற்கு அநுகுணமாக 'காஂதஸெ' என்கிற ஸ்ரீ யாமுநாசார்ய திவ்யஸூக்தியிலுள்ள 'தெ' 'ஃவாஂ' என்கிற 'யுஷக' சப்தத்தாலும் ஸம்போதநத்தாலும் சேதநத்வம் ஸூசிதமென்று அருளிச் செய்தார். ஸத்தை முதலியவைகளெல்லாம் ஸ்ரீயினிடம் ஸாக்ஷாத் வாச்யவிதயா அந்வயிக்க முடியாததால் லக்ஷணையினல் பகவானுக்கு ஸ்ரீயானவள் அந்தரங்க விசேஷணபூதை என்கிற அபிப்ராயத்தைக் காட்டுகின்றன வென்று அழகாக அவைகளுக்கு ஒரு கமநிகையைத் திருவுள்ளம்பற்றினர். ப்ரக்ருதியோடு ஸ்ரீ தாதாத்ம்யம் சொல்பவர்களை 'தெ யவநிகா' என்கிற பரமாசார்ய ஸ்ரீஸூக்தியினல் பேதத்தை ஸ்தாபித்து நிரஸநம் பண்ணினர். லக்ஷ்மீ விஷயத்தில் ப்ரக்ருதி சப்த ப்ரயோகத்துக்கு யாது காரணமென்கிற சோத்யத்தைத் தாமே உத்தாபநம் செய்து, ப்ரக்ருதி விசேஷாபிமாநிநீ என்கிற தாத்பர்யத்தினல் அந்த சப்தம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறதென்று உபபத்தியை ஸாதித்தார். ஸத்தை அஹந்தை முதலியவைகளுடன் சேர்ந்திருக்கின்ற பகவானே ஸ்ரீ என்றும், ஸ்ரீ ரூபமான ஒரு நித்ய சரீரத்தோடு அந்தப் பகவானே சேர்ந்திருக்கிறார் என்றும், போகார்த்தமாக காதாசித்கமான ஸ்ரீ ரூப விக்ரஹத்தைப் பகவான் தரித்துக் கொண்டிருக்கிறு ரென்றும் சொல்பவர்களுக்கு, அந்தந்தச் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள நித்ய பிந்ந சேதநத்வ வ்யபதேசங்களாலேயே ஸமாதாநமளித்து, 'ஹ்ரீஶ்வ தெ லக்ஷ்மீஶ்வ வத்நௌ' என்கிற ச்ருதியை எடுத்து, பதியாகிய நாராயணனுக்கும் பத்நியாகிய ஸ்ரீதேவிக்கும் ஸ்வரூப பேதத்தை ஸ்பஷ்டமாகக் காட்டி, ஸ்வரூபைக்ய ஸம்சயத்தை நிராகரணம் பண்ணினர். இந்த விஷயத்தில் 'காஂதஸெ' என்கிற வ்யதிகரண நிர்த்தேசமே மமகம் என்றும் ஸாதித்தார்.

(தொடரும்)

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## க்ருத்திகா தீபோத்ஸவ விசாரம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

ஊதம்மாஶ்ரிஹிவொரத்நம் ஊநுயொஹாரவிஶ்ரஹழ ।
ஊநுதொரயகஷ்வஶ்ரூம் ஊஊ நாயஊஹம் ஹஜெ ॥
கெஷிஸ் க்ஷெத்ரஶ்வரயீதா ரொகவஸம்ஶ்ரஹிணஃ வரெ ।
ரதாந—ரதிகாஶ்வாநெஷ்ஶ்ரீவொத்ஸவஊாஅரநூ ॥

"க்ருத்திகாதீவவியிநா ஸஊாராயநஊ—த்தழ । ஷ்ஷாநஸ்ஷ ராஜராஷ்ட்ரஸ்ஷ ஸம்வக்ஷர ஊநா—த்தழ" இத்யாதியான ப்ரமாண வசநங்களால் க்ருத்திகா தீபோத்ஸவம், நிகில ஜகதந்தர்யாமியான எம்பெருமானுக்கு ஓர் அநுத்தமமான ஆராதந மென்றும், அவனுடைய லீலாவிபூதியில் அடங்கியுள்ள ராஜராஷ்ட்ரங்களுக்கு இது ஸர்வ ஸம்பத்தையும் விளைவிக்கக்கூடிய ஆச்சர்ய கர்மாவென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இவ்விஷயம் ஆஸ்திகர்களுக்குக் கர்த்தவ்ய விசாரமாகும்.

இவ்வர்ஷத்தில் திருக்கார்த்திகை உத்ஸவம், திங்கள் செவ்வாய் புதன் ஆகிய இம்மூன்று திநங்களிலும் நடைபெற்று முடிந்ததென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். திங்கட் கிழமை திநம் நடைபெற்ற அநுஷ்டாநத்தைப் பற்றி அவ்வநுஷ்டாதாக்களை விசாரித்ததில், அவர்கள் பௌம வாஸரம் ஸர்வதா சாஸ்த்ரங்களினல் நிஷேதிக்கப்பட்டுள்ளமையால் முன் தினமே தாங்கள் ஆகர்ஷித்து அநுஷ்டித்ததாகத் தெரிவித்து விட்டனர். ஆகையால் அவர்களின் அநுஷ்டாநத்தைப் பற்றிய விசாரம் நிஷ்பல மென்று எண்ணி அதில் நின்றும் விரமிக்கிறேன்.

பௌம திநத்தில் ஸ்ரீரங்காதி பகவதபிவ்யக்த க்ஷேத்ரங்களிலும், புத திநத்தில் சில திவ்ய க்ஷேத்ரங்களிலும் க்ருத்திகா தீபோத்ஸவம் நடந்தேறியது. அவைகளில் எந்தத் திநம் தீபோத்ஸவாநுஷ்டாந காலத்வேந ப்ரமாண ஸித்தமென்பது ப்ரக்ருத விசார விஷயம். பௌம திநத்தில் நடத்தின உத்ஸவாநுஷ்டாயிகளான மஹான்கள் அருளிச் செய்யும் உபபத்தியை அடியேன் கேட்ட வரையில் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் ஈச்வர ஸம்ஹிதாதிகளில் பௌம வார நிஷேதம் காணுமையால் நம்முடைய ஸம்ஹிதா விதாநப்படிப் பௌம திநம் சுத்த க்ருத்திகா பர்வயுக்தமானதால் அது தான் அநுஷ்டாநோசித திநமென்பது அவர்கள் திருவுள்ளம் என்று தெரியவருகிறது.

சிலர் அது அவ்வளவு உசிதமானதல்ல வென்றும், புத திநாநுஷ்டாநம் தான் சாஸ்த்ர ஸம்மத மென்றும் எண்ணி, வைதிக ஸார்வ பௌமோக்தமான தசநிர்ணயம் காலப்ரகாசிகை முதலியவைகளிலிருந்து ப்ரமாணங்களைச் சொல்லுகிறார்கள். தச நிர்ணயத்தில் க்ருத்திகா தீபோத்ஸவாநுஷ்டாநத்தைப் பற்றி விசாரித்திருக்கிற ப்ரக்ரியை வருமாறு:—

ப்ரதமத:, க்ருத்திகா தீபோத்ஸவத்துக்கு க்ருத்திகா நக்ஷத்ரத்தை ப்ராதாந்யேந நிமித்தமாக ப்ரமாணங்களால் பரக்கப் பேசி, பிறகு அந்த க்ருத்திகைக்குப் பூர்வ யோகேந ப்ராசஸ்த்யத்தைச் சொல்லி, க்ருத்திகா த்வயத்தில் ஸம்பந்த சூந்யமா யிருந்தாலும் பர்வ யுக்தமான ரோஹிணீ தான் அநுஷ்டாந நிமித்தத்வேந க்ராஹ்யை என்றும் க்ரஹண தோஷ துஷ்டமானால் தத்திந தந்மாஸாதிகள் ப்ரமாத்ரு மதி பேதேந வர்ஜ்யங்களென்றும் ப்ரமாணங்களைக் காட்டி, க்ருத்திகைக்குத் திநத்வய ஸம்பந்தம் நேருமாகில் எந்தத் திநத்தில் க்ருத்திகாதிக்யமோ அது தான் அநுஷ்டாந காலமென்றும், ஸமமாக இருந்தால் பர திநத்தில் அநுஷ்டிப்பது யுக்தமென்றும், பர்வாவுக்குத் திநத்வய ஸம்பந்தமிருந்தால் பர திநம் அநுஷ்டாந காலமென்றும் வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு '[illegible] ' என்ற வசநங்களினால் பர்வாவில் உத்ஸவாநுஷ்டாநம் மாங்களிகமென்று பர்வாவை ப்ரசம்ஸித்துப் பேசி, '[illegible] ' என்று பௌம வாரமானது அப்படி ப்ரசஸ்தமான பர்வ ஸம்பந்தம் பெற்றிருந்த போதிலும் க்ருத்திகாதீபோத்ஸவாநுஷ்டாநத்துக்குக் காலமாக மாட்டாதென்று ஸர்வாத்மநா நிஷேதித்துப் பேசி ப்ரமாண சரவ்ருஷ்டியையும் பொழிந்திருக்கிறார். [illegible] ' என்று ஷட்தர்ம ஸங்க்ரஹக் காரருடைய ச்லோகத்தை எடுத்துக் காட்டி, ஸம்ப்ரதீப வசநத்தைத் தத்தாவலம்பமாக்கி நிகமித்திருக்கிறா ரென்பது க்ரந்த நிரீக்ஷகர்களுக்கு ஸுப்ரஸித்தமாய்த் தெரியும்.

இப்படி இவ்வசநங்களை ஸ்வோக்தார்த்தத்தில் ப்ரமாணமாக எடுத்துக் காட்டியும், மதாந்தரஸ்தர்களான வைத்ய நாதர் திகளினால் ஸ்வீய க்ரந்தங்களில் ஆங்காங்கு ஸ்வோக்தார்த்தோபபாதகமாக இவருடைய க்ரந்தத்தை ப்ரமாணமாக எடுத்தும், ப்ராமாணிக்த்வேந அஸக்ருத்தாகப் புகழப்பட்டுள்ளவரான தாமும் ப்ராமாணிகோத்தம்ஸராய் நின்று பௌம திநத்தை நிஷேதித்து மிருக்க, ப்ராஜ்ஞர்கள் சாஸ்த்ர வச்யரா யிரா

மல் பௌம திநத்தை அநுஷ்டாந காலமாக்கி அந்த நிஷேத வசநத்தை வ்யர்த்தமாக்கு வது உசிதமா?

ஆனால் பௌம திநத்தில் அநுஷ்டித்தவர்கள் க்ருத்திகா பர்வாங்யதா ஸம்பந்த லேசமு மில்லாத புத திநத்தில் அநுஷ்டாநம் செய்தது சாஸ்த்ரீய மாகுமா வென்று சங்கிக்கலாம். அப்படியானால் 'ஏகாதஶ்யாஂ ஹோராத்ரம் நித்யமுபவஸேத் த்ரதீ ।' என்கிற சாஸ்த்ரப்படி சுத்தோபவாஸம் இருப்பவர்களுக்கு ஏகாதசியின் கலா மாத்ர ஸம்பந்தத்தையும், மறு திதியில் த்வாதசீ வ்ரதத்தையும் கொள்வது ந்யாயமோ வென்று ப்ரதிபந்தீ ப்ரஸங்கிக்கும். 'த்ரயோதஶ்யாஂ பாரணம்' இத்யந்தமான சாஸ்த்ரம் நியமிப்பதால் 'ஶாஸ்த்ராத் ப்ரவ்ருத்தி: ஶாஸ்த்ராந்நிவ்ருத்தி:' என்கிற கணக்கில் அது அமையுமென்றால், இங்கும் ப்ராதாந்யேந விதிவிஹித நக்ஷத்ர திந்யாதி ஸம்பந்த சூந்யமான திநமும் 'ஶ்ரவணே விஷ்ணு பூஜயேத்' என்றும், 'ப்ரத்ரு விஷ்ணு பூஜயேத்' என்றும் ஏகாதசீ ஸம்பந்த சூந்யதிநம் போல விதிவிஹிதமாகையால் இதுவும் அக்கணக்கில் அநுஷ்டிக்க அமையும்.

வஸ்துதஸ்து: இவ்வர்ஷம் புத திநத்தில் பௌமதிந பக்ஷத்தார் கூறியபடி நிமித்தா பர்வ ப்ரயுக்த க்லேசத்துக்கும் இடமில்லை. பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் இதர ஸ்ம்ருதிகளிலும் ஜ்யோதிச் சாஸ்த்ரங்களிலும் ப்ரதிபத் திதியை அநுஷ்டாந நிமித்தமாகப் பரக்கப் பேசியிருப்பதோடு, 'பௌர்ணமாஸ்யா வ்ருத்திஸ்தஸ்யாம் அம்ருதஸ்வம்யதே யத: । ப்ரதிபத் பௌர்ணமாஸீ ஜ்ஞேயா தத்ர தீபஸ்ய ப்ரவஹ: ॥' என்கிற ஜ்யோதிச் சாஸ்த்ர வசநத்தை விசிஷ்ய எடுத்துத் தீபாரோபண நிமித்தீபூத ப்ரதிபத் திதிக்குப் பூர்ணிமா தௌல்யத்தை ஹேதூபபாதந புரஸ்ஸரமாக ஸ்தாபித்து, அதில் தீபாரோபணம் ஸ்ரீகர மென்றும் உபபாதநம் செய்திருக்கிறார்.

நடந்த புத திநத்தில் ரோஹிணீயுக்த ததாவித ப்ரதமா ஸம்பந்த மிருப்பதால் அநுஷ்டாநத்திற்கு முக்ய காலம் நேர்ந்து விட்டதே என்கிற க்லேசத்தைத் தவிர இதர க்லேசத்திற்கு ப்ரஸங்க மில்லையென்று உறுதியிட இடமாயிருக்கிறது. ஆனால் 'புத திந ப்ரதிபத்தானது ஸாயாஹ்ந வ்யாப்தியாக இல்லையே; த்ரயோதச கடிகா மாத்ர வ்யாப்தியன்றோ புததிந ப்ரதிபத்துக்குள்ளது?' என்றோர் ஆசங்கை உதிக்கக்கூடும். வசநாந்தரங்களையும் அவைகளினால் கிடைக்கும் உபபத்திகளையும் ஆராய்ந்தால், அச்சங்கை அப்போதே பரிஹரிக்கப்படுமென்பதில் ஆக்ஷேபமில்லை. எப்படியெனில்: க்ருத்திகா தீபோத்ஸவாநுஷ்டாநத்துக்கு நிமித்தமாகச் சொல்லியிருக்கும் பூர்ணிமையும் ப்ரதிபத்தும்

ஸாயாஹ்ந வ்யாப்தமாகவே இருக்கவேணு மென்கிற நியமமில்லை. திநத்தில் கலாமாத்ர வ்யாப்தியே பர்யாப்தமென்று ஸார்வ பௌமர் உதாஹரித்திருக்கிற விஷ்ணு ரஹஸ்ய பகவச் சாஸ்த்ர வசநங்களினால் ஏற்படுகிறது. தசநிர்ணயத்தில் ' வாஸரே கலா மாத்ரேபி தத்ரைவ கார்த்திகா ॥ ' ததா விஷ்ணுரஹஸ்யே 'ரோஹிணீ க்ருத்திகாயுக்தா பௌர்ணமாஸீ கலாபி யதி । நிசாதௌ தீப ஸந்தாநம் ஸர்வஸம்பத்ஸுகாவஹம் ॥ திவஸே கலயா வாபி பௌர்ணமா ஸீ ஸம்ஸ்ப்ருசேத் । திவாராத்ரம் தரோர் ப்ரூஹி தீபோத்ஸவ மதாசரேத்' என்றும், பகவச் சாஸ்த்ரத்தில் 'திவஸே தத் கலாமாத்ரா பௌர்ணமாஸீ ரோ ஹிணீயுதா । திவாராத்ரம் தரோ ராஷ்ட்ரக்ஷார்த்தம் தீபமாசரேத் ॥ ' என்றும், உபாத்தமான இவ்வசநங்களால் பகலில் பூர்ணிமைச்சுக் கலாமாத்ரஸம்பந்தமே போதுமென்று வ்யக்தமாகிறது.

ஸார்வபௌமர் தாமே இவ்விஷயத்தைப்பற்றிச் சங்கித்துப் பரிஹரித் திருக் கிறார் நவித்யாதியால். அதாவது: உதய ஸம்பந்தமுள்ள திதிகளும் நக்ஷத்ரங்களும் ஜல விஸர்ப்பி தைல பிந்து ந்யாயத்தாலே ஸாயாஹ்நம் வரையில் வ்யாபிக்கு மாதலால் அபர்வாவில் செய்த தீபாரோபணத்தால் நேரிடும் தோஷமானது, குறைந்திருக்கும் இவ் வித திதி நக்ஷத்ரங்களில் அநுஷ்டிக்கப்பட்ட தீபோத்ஸவத்திற்கு ஸம்பவிக்க மாட்டா தென்று உபபாதித்திருக்கிறார். 'பர்வாவுக்கு மாத்ர மன்றோ பூர்வோக்த ந்யாயத்தாலே வ்யாப்தி ஸாயாஹ்ந பர்யந்தமாகச் சொல்லித்தாயிற்று; ப்ரஸ்துதமான புத திந ப்ரதிபத் திதிக்கு அந்த வ்யாப்தி இல்லையே என்கிற சங்கைக்கு என்ன பரிஹாரம் வந்தது?' என்னும் ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. 'ஸா திதிஸ்ஸகலா ஜ்ஞேயா யஸ்யாமப்யுதிதோ ரவி: । ' 'யாம் திதிம் ஸமநுப்ராப்ய உதயம் யாதி பாஸ்கர: ॥ ஸா திதிஸ்ஸகலா ஜ்ஞேயா' என்கிற ப்ருகு தேவல வசநங்களினால் உதய காலீந ஸகல திதி களுக்கும் பூர்ண வ்யாப்தி உள்ளதாகச் சொல்லி யிருப்பதால் திநாந்த பர்யந்த வ்யாப்த மான பூர்ணிமையைப் போல், நடந்த புததிந ப்ரதிபத் திதியும் விஹிதாநுஷ்டாந கால மென்பது ஸித்தம்.

புத திநம் இப்படி ஸகல விதத்தாலும் முக்யகாலமாகக் கிடைத்திருக்க, ஆபத்தர பக்கணம் ஆபண்டித பாமரம் நிஷித்தத்வேந ப்ரஸித்தமான பௌம திநத்தில் இவ்வர் ஷம் இவ்வுத்ஸவத்தை அநுஷ்டித்திருப்பது கண்டே க்ருகச தாரா ந்யாயத்தாலே அத் யந்த கேதத்தை உண்டாக்குவதால் இவ்வர்ஷம் இவ்வநுஷ்டாநம் இப்படித் தவறி நடந்தபோதிலும், இனியாவது இவ்வித நிஷித்தாநுஷ்டாநம் வேண்டாமென்று சாஸ் த்ர பராமர்சிகளான ப்ராஜ்ஞர்கள் நியமிப்பார்களென்று நம்புகிறேன்.

'அப்படியாகில், பாஞ்சராத்ர ஸம்ஹிதையில் சதுர்த்தசீ பரணீ வேத தோஷங்களைச் சொல்லிப் பௌம வார தோஷத்தைச் சொல்லாமற் போவானேன்? 'யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்' இத்யாதி ப்ரமாண ஸஹஸ்ரங்களால் ஸர்வஜ்ஞத்வேந ப்ரஸித்தனான ஸர்வேச்வரன் தான் இந்தப் பௌம தின தோஷத்தை அறியாமற் போனானோ? அல்லது சதுர்முகன் தான் ஸ்வயம் தன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் போது மறந்தானோ' என்கிற சோத்யம் வரக்கூடும். அதற்கும் பின்வருமாறு பரிஹாரம் செய்ய முடியும். நியமேந பார்ச்வ ஸ்தாந ஸ்திதங்களான திதி நக்ஷத்ரங்களால் அஸக்ருத்தாக இந்த க்ருத்திகா பர்வாக்களுக்கு நேரிடும் உபத்ரவத்தை விலக்குவதற்காகவே ஹிதைஷியான ஈச்வரனும் ப்ரவக்தாக்களான பின்புள்ளாரும் முயன்று உபதேசியதே தவிர, பௌம தினம் வர்ஜ்யமென்று அவர்களுக்குத் தோற்றவில்லை என்பது வீண் வாதம். அப்படியானால் பௌம தின தோஷத்தை அறியக்கூடிய மார்க்கமுண்டோ வென்னில்: பாஞ்சராத்ராகம நிஷ்டர்களுக்கும் 'அநுக்தமந்யதோ க்ராஹ்யம்' என்கிற சாஸ்த்ராநுஷ்டாந முண்டு. அவ்வழியால் திதி நக்ஷத்ர வேத தோஷம் போல் பௌம தோஷமும் வாஹ்யமென்றே ப்ரவக்தாவுக்குத் திருவுள்ளமென்று ப்ரமாணிகர்கள் கொள்ள வேணும்.

மயிலாப்பூர்
மார்கழி 15௳

வ. ஸ்ரீநிவாஸாசார்யர்

---

(2)

## வைதிகர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ வே. தீ. ஸம்பாதகருக்கு:—

அநேக: ப்ரதிபாதா தாவதீவ வசுந்தரா ।
யதஸ்ஸ்வயம் வேதோக்தமார்க்காத் வைதிகா அபி ॥
அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத் ।
யேநாவத்யவதே லாய ஸதாய ப்ரவர்த்ததே ॥

அநாதி நிதநமாயும், அவிச்சின்ந ஸம்ப்ரதாயாகதமாயும், அபௌருஷேயமாயு முள்ள வேத மார்க்கா நுஷ்டாந பரர்களான ப்ராஹ்மணோத்தமர்களே! வைதிக ச்ரேஷ்டர்களான பண்டித சிகாமணிகளே! இந்த என் வ்யாஸத்தின் மூலம் என்னுடைய ஹார்த்தமான துக்காதிசயத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள அபிநிவேசாதிசயத்தையும் உங்களிடம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதனால் என்னை எம்மாதிரியாகிலும் நீங்கள் நினைத்துக்கொள்ளலாம். தத்காலம் நம் ஸமூஹம் மதாசாரம் நடைஉடை பாவனை ஆகிய எல்லா விதமான புராதந ஸ்வரூபங்களும் பரிஹஸிக்கப்படுவதன்றி, அவைகளை அடியோடு தொலைத்து விடவும், மற்றையோரும் நம்மில் சிலரும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்

கள் என்பது உலக ஸமாசாரப் பத்ரிகாபிமாநிகள் யாவரும் அறிந்த விஷயம். நீங்கள் இச் சமயத்திலும் உங்கள் மதம் ஆசாரம் முதலிய நிஜ தத்வங்களை உலகிற்கு ஊட்டி, உலகை உங்கள் பக்கம் திருப்பிக் கொள்ளாவிடில் கட்டாயம் நீங்கள் பகவானுக்கோ, அல்லது உங்கள் ஆசார்யர்களுக்கோ உங்கள் பின் ஸந்ததியார்களுக்கோ கொண்டாடத்தகுந்தவர்களாக மாட்டீர்கள். மேலும் அவர்களின் வெறுப்புக்கும் ஆளாவீர்கள் என்பது திண்ணம். நீங்கள், ஸந்த்யாவந்தநாதி நித்ய கர்மங்களைக் காலத்தில் செய்யலாம். ஜ்யோதிஷ்டோமாதி யாகங்களைச் செய்யலாம். முக்காலமும் ஓதலாம். தர்க்க வேதாந்த சாஸ்த்ரங்களை ஆராயலாம். தபஸ்ஸும் பண்ணலாம். பகவத் த்யாநம் செய்யலாம். அநந்ய கதிகர்களாய்ப் பகவானைச் சரணமு மடையலாம். ஆனால், உங்களுக்குத்தான் மோக்ஷம் ஸித்தம் என்று நீங்கள் நினைத்திருக்கிறீர்களே! அதுமாத்ரம் தவறு என்பதுதான் எனது அபிப்ராயம். ஏனெனில், பிறரும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யடையவேண்டும் என்கிற எண்ணம் உங்களிடத்தில் இல்லை. எவர்கள் எக்கதி யடையினும், நீங்கள் மாத்ரம் ஏகாந்த பகவத் த்யாநம் செய்தால் மோக்ஷமடைந்து விடலாமென்றும், 'பிறர் பாஷண்டிகளாய் நித்ய ஸம்ஸாரிகளாகவே இருக்கட்டும்; நமக்கென்ன? உலகைக் கட்ட நம்மால் முடியாது; பவிஷ்யத் புராண ரீதியாகக் கலி மகிமையால் உலகம் ஸங்கர ஜாதிமயமாய்த் தான் முடியும். அது தெய்வகதி; அதை ஒருவராலும் ஒரு ஸங்கத்தினாலும் பரிஹரிக்க முடியாது' என்று வீணில் வேதாந்தம் பேசித் திரிகிறீர்கள். நீங்கள், 'நாம் உடையவர் சிஷ்யர்; ராமாநுஜ ஸித்தாந்த நிர்வாஹ ஸார்வ பௌமர்' என்று மாத்ரம் பிருதுகளைச் சூட்டிக்கொள்ளுகிறீர்கள். அந்தோ! என்ன பரிதாபம். இது செவ்வாய்க்கிழமைக்கும் மங்கள வாரம் என்று பெயர் சூட்டினாற்போலிருக்கிறது. நமது சரமகாலத்தில், 'நம் ஸித்தாந்தத்தை உலகில் ப்ரவசநம் செய்து நிலைநாட்ட வேண்டியது நமது சிஷ்யர்களாகிய உங்கள் கடமை' என்று நியமித்த ஸ்ரீ உடையவரின் ஆணையை நீங்கள் என் செய்தீர்கள்? முற்றிலும் மறந்தீர்கள்.

மேலும், உங்கள் பிள்ளைகளையும் பேரன்மார்களையும் பெண்மணிகளையும் நீசக் கல்விச் சாலைக்கு அனுப்பி வருகிறீர்கள். உங்கள் பெண்களை நீசக் கல்விமானுக்கே விவாஹம் செய்து கொடுக்கிறீர்கள். இதனால் நீங்கள் அடைந்த பயன் தான் என்ன? உங்கள் ஸந்ததிகளே, உங்கள் வேதம் ஆசாரம் முதலிய புராதநக் கொள்கைகளை வேரறுத்து வருகின்றன. நீங்கள் அதற்கு மறைமுகமாக நின்று, தெய்வத்தின் பேரில் பழி போட்டு, ஆதரவும் கொடுத்து வருகிறீர்கள். க்ராப் முகக்ஷௌரம் பண்ணிக்கொண்டும், நடை உடை பார்வை இவைகளில் முற்றிலும் வேறுபாடுடையவர்களுமான உங்கள் பிள்ளை மாப்பிள்ளைமார்களையும் பெண் பேத்திமார்களையும் நீங்கள் விலக்க முடியவில்லை. அவர்களுடன் போஜநாதிகள் முதலியவற்றை வைத்துக்கொள்ளுகிறீர்கள். ஆகையால் நீங்கள் மாத்ரம் எவ்விதம் மோக்ஷம் அடைய முடியும்? உங்களுக்கு ஒரு த்ருஷ்டாந்தம் கூறுகிறேன். ஒரு பட்டணத்திலோ அல்லது ஒரு க்ராமத்திலோ காலரா நிரம்பப் பரவினதாக வைத்துக்கொள்வோம். அதிலிருந்து விடுபட்டு ஒருவன் ஸுகஜீவநத்தை யடைய வேண்டுமானால் தன்னிருப்பிடமான பட்டணம் அல்லது க்ராமம் முழுமையும் சுத்தப் படுத்தல் வேண்டுமன்றோ? அஃதின்றி 'அக்கம் பக்கம் பட்டணம் கிராமம் எப்படியாவது இருக்கட்டும்; தான் மாத்ரம் ஸ்நாநாதிகளைச் செய்துவிட்டு சுத்தமாயிருந்தால் ஸுகமாயிருக்கலாம்' என்று எண்ணினால், அவன் எவ்விதம் அக்கம் பக்கமுள்ள அசுத்த வாயுவி

னால் காலரா நோய்க் கிரையாவனே, அவ்விதமே அசுத்த ஜனங்களிடையே வசிக்கும் நீங்கள் மாத்ரம் சுத்தமாயிருப்பதானால் அவ்வசுத்த ஜன ஸம்ஸர்க்கத்தினால் நீங்களும் அசுத்தர்களாய் மோக்ஷத்தைப் பெற அர்ஹராகமாட்டீர்கள். நீங்கள் மோக்ஷத்தையடைய வேண்டுமானால் உங்களைச் சேர்ந்தவர்களை முதலில் பரிசுத்தர்களாக்க வேண்டும்.

உடையவரின் சரித்ரத்தையாவது நீங்கள் சற்றுச் சிந்திக்கக்கூடாதா? அம்மஹான் மாத்ரம் தமது ஜ்ஞானத்தைக் கொண்டு பகவத்த்யானம் செய்து மோக்ஷமடைந்திருக்கக்கூடாதா? அஃதின்றி, ஆசார்யரின் ஆணையையும் மீறி, த்வயத்தைப் பஹிரங்கப்படுத்தினாரன்றோ?. அநேகம் பாஷண்டிகளையும் நம் மதத்தில் சேர்த்தார். ஒரு பகவத் விக்ரஹத்தை எழுந்தருளப் பண்ணுவதற்காகத் துருஷ்க ராஜ்யத்திற்குச் சென்றார் இன்னும் பலவித சீர்திருத்தங்களை அம்மஹான் செய்யவில்லையா? அவர் மாத்ரம் 'இது கலிகாலம், இதில் நாம் ஒரு நியதியையும் ஏற்படுத்தமுடியாது' என்று நினைத்து ஏன் ஏகாந்தத்தில் மௌன வ்ரதம் பூணவில்லையோ தெரிகிலேன்.

ஆனால் அம்மஹான் அவதார புருஷர் என்று நீங்கள் சொல்லலாம். நீங்களும் ஏன் அரிய பெரிய கார்யங்களைச் செய்து அவதார புருஷர்கள் என்று பெயர் வாங்கக்கூடாது? மனித சக்தியின் உன்நத நிலைமையே அவதாரம் என்பதை நீங்கள் உணரவில்லை போலும்! உங்களுக்கு உலக க்ஷேமத்திற்கும், அதன் மூலம் உங்கள் க்ஷேமத்திற்கும் உழைக்க புத்தியும் சக்தியுமிருந்தும், நீங்கள் மனித முயற்சியைக் கைவிட்டு சோம்பேறிகளாய் உங்கள் கடமையைச் செய்ய மறுக்கிறீர்கள். எல்லாம் விதிவசம் என்கிறீர்கள். ஆனால் நீங்கள் பணம் ஸம்பாதிக்க அரும்பாடு படுகிறீர்கள். பெண்களுக்கு இங்கிலீஷ் வரன் தேட தேசாந்தரம் செல்கிறீர்கள். பிள்ளைகளுக்கு நீசக் கல்வி கற்றுக்கொடுக்க உங்கள் உயிரையும் த்யாகம் செய்கிறீர்கள். மற்றும் உங்கள் லௌகிக ஸ்வய நலத்திற்கு எவ்வளவோ முயற்சி செய்கிறீர்கள். அவ்விஷயங்களில் மாத்ரம் ஏன் உங்களுக்கு 'எல்லாம் விதிவசம்' என்று ஒய்வு உண்டாகவில்லை? நீங்கள் இவ்வுலகை வெறுத்துக் காட்டுக்குள் சென்று தபஸ் செய்வதாக இருந்தால், உங்களிடம் இவ்வளவு குறை கூறி யிருக்கமாட்டேன். நீங்கள் இவ்வுலகில் இந்த ஜனங்களிடையே வஸித்துக் கொண்டு உங்கள் லௌகிக ஸ்வயநலத்தை மாத்ரம் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்கையில், நீங்கள் ஏன் உங்கள் ஸமூஹத்திற்கும் ஸ்வதிகாசார அபிவ்ருத்திக்கும் உலக க்ஷேமத்திற்கும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் ஒன்றுபட்டு உழைக்கக் கூடாது? அப்படி இனியாவது ஒன்று சேர்ந்து உழைக்காவிடில், உங்கள் மதம் ஆசாரம் முதலிய எல்லாப் புராதந ரிஷிகளின் கொள்கைகளும் அடியோடு நாசமாய்விடும். அம்மாதிரி போய் விடில் அதற்கு நீங்களும் உடந்தைக் குற்றவாளிகள்தான் என்பதைப் பற்றி ஸர்வஜ்ஞான பகவான் மறு உலகில் உங்களைக் கட்டாயம் தண்டிப்பன். ஆகையால் உடனே ஒன்று சேருங்கள்; உங்கள் கடமையைச் செய்யுங்கள். உடந்தைக் குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்களை யான் இந்த வியாஸத்தினால் எச்சரிக்கை செய்கிறேன்.

ஆரணி
மார்கழி மீ 12 உ } சோரையூர்—பே. வ. ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

# ஸம்பாதகீயம்.

"𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌖𑌲𑌃 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌮𑌿𑌥𑍋 𑌧𑌿𑌯𑌾" என்று ஸ்ரீ ப்ரஹ்லாதன் நரஹரியைப் பார்த்து, ஜகத்தில் துர்மதிக ளெல்லாரும் ஸுமதி களாகி ஜகத் முழுவதும் க்ஷேமத்தை அடையவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அதை அடியொற்றி நாமும், ஸகல ஜனங்களும் எப்பொழும் பரஸ்பரம் ஹிதத்தையே இச்சித்து ஸுகமாக வாழ்ந்து வரவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ராஜாங்கத்தாரும் ஆசாரச் சீர் திருத்தமும்.

ஸ்வல்ப காலம் முன் வரையில் ஆசாரச் சீர்திருத்த மென்பது கேவலம் வ்யக்தி நிஷ்டமாக மாத்ரம் இருந்தது. சாஸ்த்ரீய அநுஷ்டானங்களில் அபிருசி இல்லாதவர்கள் அவைகளைப் பரித்யஜிப்பது உண்டு; ஆனால், ராஜாங்கத்தார் அவர்களுக்கு எவ்வித ஆபிமுக்யத்தையும் அக்காலத்தில் செய்தாரக ளில்லை. பிறகு, ஆசார மாறுதல்களைச் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே, அவர்கள் ராஜாங்கத்தாரிடம் செல்வாக்கைப் பெற்றவர்களாய்த் தமது சீர்திருத்த வ்யாபாரத்தில் அதிகாரிகளின் ஆதரத்தை ஸம்பாதித்துக்கொண்டு, அதனால் ஒரு வித உந்மேஷத்தையும் அடைந்து வந்தார்கள். அந்த உந்மேஷம் தேசத்தின் க்ஷேமத்திற்கு விருத்தமாக இருந்தபோதிலும், சாஸ்த்ரப்படி அநுஷ்டானம் நடத்தி வந்தவர்களுக்கு ஸாக்ஷாத்தாக எவ்வித தீமையையும் அது விளைவிக்காமல் இருந்தபடியால், அதை அவ்வளவு பாதகமாக ஒருவரும் க்ரஹித்தாரில்லை. இப்பொழுது கால வைகுண்யத்தால் அந்தச் சீர்திருத்தக்காரர்களுக்கு ராஜாங்கத்தாரிடம் செல்வாக்கு மாத்ரமின்றிக்கே ராஜ்ய பார நிர்வஹண வ்யாபாரத்தில் ஸ்வல்ப அதிகாரமும் கிடைத்து விட்டது. அதன் பலமாக அவர்கள் மற்றவர்களையும் தாம் செய்வது போல ஆசார மாறுதல்களைச் செய்யும்படி நிர்ப்பந்திக்க ஆரம்பிக்கிறார்கள். சாஸ்த்ரப்படி அநுஷ்டிப்பது ஒரு குற்றமாய்; அப்படி அநுஷ்

டிப்பவர்கள் தண்டனைக் குள்ளாவார்களாம். இது கலியின் கொடுமை யன்றோ ?

'பரலோகத்து ஸம்பந்தமான ச்ரேயஸ்ஸைப் பற்றிய விஷயங்களில், ராஜாங்கத்தார் ப்ரவேசித்து ஒரு வித நிர்ப்பந்தத்தைச் செய்வதற்கு அதி காரிகளாவார்களா ?' என்பது மிகவும் சிந்திக்கத் தகுந்ததே. ஆனால், அதைப் பற்றி விசாரிக்க நாம் இப்பொழுது ப்ரவ்ருத்திக்கவில்லை. அவர் களுக்கு அம்மாதிரி அதிகாரம் இருப்பதாக அப்யுபகமம் செய்துகொண்டே, இவ் விதம் அவர்கள் நிர்ப்பந்திக்க ப்ரயத்நப்படுவது ராஜ்யத்தின் ச்ரேயஸ் ஸின் பொருட்டு ஆகுமா?' என்பதை மாத்ரம் விசாரிக்க ப்ரயத்நப்படுகிறோம். ஜநங்களெல்லாரும் கேவலம் ஸாத்விகர்களல்லர்; அவர்களுள் ரஜஸ்தமோ குணங்கள் தலையெடுத்து நிற்பவர் பலருண்டு. அவர்களுக்கு விவேகம் அதி மாத்ரம் பரிமிதம்; ஆக்ரஹம் அவர்களிடம் ஸுலபமாக ப்ரவேசிக்கும். அதி லும் மதவிஷய மென்றால் அந்த ஆக்ரஹத்துக்கு மிகுந்த கொண்டாட்டம். கணக்கற்ற ஜநங்கள், அம்மாதிரி ஆக்ரஹத்திற்கு வசப்பட்டவர்களாய், தமது சக்தி அசக்திகளையும் தமக்கு ஸம்பவிக்கக்கூடிய ஸாதக பாதகங்களையும் கொஞ்சமேனும் ஆலோசியாமல், முரட்டுத்தனமாக ப்ரவ்ருத்தித்துத் தமக் கும் மற்றவர்களுக்கும் பெருத்த நாசத்தை விளைவித்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்து மிருக்கிறோம்; கேட்டு மிருக்கிறோம். அப்படிப்பட்ட உத்பாதங் களுக்கு இந்த நிர்ப்பந்தம் எங்கேயாவது காரணமாகி விடுமோ என்னும் பீதியே நம்மை மிகவும் வருத்துகின்றது. இப்பொழுது கந்யா விவாஹ விஷயமாக ராஜாங்கத்தார் செய்ய ப்ரயத்நிக்கும் நிர்பந்தத்தைக் கேட்டு, பயந்த ஸ்வபாவமுள்ளவர்களென்று எண்ணக்கூடிய சில ஸாதுக்கள் கூட 'அவர்கள் எப்படிப்பட்ட நிர்ப்பந்தம் செய்த போதிலும், நாம் அது விஷயத் தில் சாஸ்த்ரம் சொல்லுகிறபடியே நடப்போம்; அதனால் நேரும் ராஜ நிக்ர ஹத்தை நாம் ஆதரிப்போமில்லை' என்று தீர்மானித்திருப்பதை நாம் அறி வோம். இந்த மநோபாவம் ஒரு இடத்தில் உபக்ரமித்தால், அது எவ்வி டம் போய் முடிவு பெறும் என்று யாரால் சொல்லக்கூடும் ?

இதற்கு நிதர்சநமாக நம்முடைய அயல் தேசத்தாரான துருஷ்கர் களின் ராஜ்யத்தில் இப்பொழுது நடைபெற்று வரும் கலஹத்தை நாம் சற்று கவனித்துப் பார்ப்போம். ஒரு மாஸம் முன் வரையில் அந்தத் தேசத்தில் எல்லாம் சாந்தமாகவே இருந்து வந்தது. திடீரென்று அவ்விடத்திய ஜநங் களுள் பலர், ராஜாங்கத்திற்கு விரோதிகளாகக் கிளம்பி, ராஜாவின் மீது வைரங்கொண்டு, ராஜதாநியை நோக்கிப் படை எடுத்துப் போய்ப் பெரிய யுத் தத்தைச் செய்து, கணக்கற்ற ராஜ படர்களைக் கொன்று, தாமும் பஹு வாக மடிந்து மஹத்தான விபத்தை விளைவித்து விட்டார்கள். ராஜா

ஆகாசக் கப்பல் வழியாக ஸ்தலாந்தரம் போய் விட்டாராம். தேசம் முழுவதும் அராஜகமாக இருக்கின்றதாம்; ஸாது ஜநங்கள் அநுபவிக்கும் கஷ்டம் வாசாமகோசரமாம். இப்படி ஆக்ரஹப்பட்டு ஜநங்கள் முரட்டுத்தனமாக ஆரம்பித்ததின் காரணத்தை விசாரித்த அபிஜ்ஞர்களுட் பலர், இந்தக் கலஹம் முழுவதும் ஆசாரச் சீர்திருத்த விஷயமான ஒரு ராஜாஜ்ஞையின் பரிபாகமென்று விவரிக்கிறார்கள். அந்தத் தேசத்தின் ராஜா ஒரு வர்ஷ காலமாகப் பாச்சாத்ய தேசங்களுக்கு யாத்ரையாகப் போயிருந்தார். அந்தத் தேசங்களிலுள்ள ஜநங்களின் நடை உடை பாவனைகளைப் பார்த்து, அந்த அரசன், அவைகளில் மிக்க குணம் இருப்பதாயும், தமது தேசத்தின் பண்டைக் காலத்திய நடை உடை பாவனைகளெல்லாம் குணமற்றிருப்பனவாயும் எண்ணம் கொண்டு, தாம் தமது ராஜதாநிக்குத் திரும்பி வந்தவுடன், தமது ராஜ்யத்தில் இருக்கும் ப்ரஜைகளெல்லாரும் பழைய காலத்திய நடை உடைகளை த்யஜித்து விடவேண்டுமென்றும் பாச்சாத்ய நாகரிக ப்ரகாரம் எல்லாரும் வர்த்திக்க வேண்டுமென்றும் ஒரு உத்தரவு பிறப்பித்து, அதை பலாத்காரமாக அநுஷ்டாநத்திற்குக் கொண்டு வர ப்ரயத்நப்பட்டார். துருஷ்கர்களுக்குள், ஸ்த்ரீகள் பஹிஸ் ஸஞ்சாராநர்ஹர்களென்றும் அவர்களுடைய ஸ்வாதந்த்ர்யம் சிற்சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதென்றும் சில தீவ்ரமான வ்யவஸ்தைகள் உண்டு; புமான்களுடைய நடை உடைகளிலும் சில பலமான நியமங்கள் உண்டென்று தெரியவருகிறது: இப்பொழுது இந்த அரசன் அந்த நியமங்களெல்லாவற்றையும் அடியுடன் மாற்ற ஆஜ்ஞைகளைப் பிறப்பிக்கவே, ஜநங்களுக்கு மஹத்தான ஆக்ரோசம் ஜநித்து இம்மாதிரி ப்ரவ்ருத்தித்து விட்டார்கள் என்று நாம் அறிகிறோம். பதினாயிரம் ஜநங்களுக்கு மேல்பட்டே இது வரையில் சேதமாம். இன்னும் எவ்வளவு ஜநங்கள் நசிக்கப்போகிறார்களோ? யார் அறிவார் ?

ராஜ்ய பரிபாலநம் என்பது ஒரு அஸாதாரண வ்யாபாரம்; பலவித ஜநங்களை அடக்கி, ஒருவரும் வீணில் நாசமடையாமல் ஸம்ரக்ஷித்து வர வேண்டியது அரசனுடைய தர்மம். கேவலம் ஸைந்ய பலத்தை மாத்ரம் ஆதாரமாகக் கொண்டு ராஜ்ய கார்யங்களில் ப்ரவ்ருத்திப்பது குணமாக மாட்டாது. ஸைந்ய பலத்தைக் கொண்டு ராஜாங்கத்தார் எந்த உத்தரவையும் அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவரக் கூடும். ஆனால், அப்படிச் செய்வது ப்ரஜைகளுக்கு மிக்க நாசத்தை விளைவிக்கும். அப்படி ப்ரஜைகளுக்கு நாசத்தை விளைவித்து, ராஜாங்கத்தார் என்ன ஸுகத்தை அநுபவிக்கக்கூடும்? விவேகிகளும் வித்வான்களுமான மந்த்ரிகளைக் கொண்டு யுக்தாயுக்தங்களைத் தீர்க்கமாக விசாரித்து அரசர்கள் செங்கோல் செலுத்திவந்தால் தேசத்துக்கு ச்ரேயஸ் ஸம்பவிக்கும்; இல்லாவிட்டால் தீமையே விளையும். இந்த விஷயத்தை நமது ராஜாங்கத்தார் நன்கு பராமர்சிப்பார்களாக.